# தவக்காலம்: இரங்கலின் காலமல்ல, இரக்கத்தின் காலம்

தீபகத்திலிருந்து

இறையாசீர்.

மீண்டும் தவக்காலத்தில் நுழைகிறோம். தவக்காலம் என்பது இரங்கலின் காலம் அல்ல. இரக்கத்தின் காலம். தவமும் செபமும் தனிவாழ்வுக்கானது மட்டுமல்ல, எனது பொதுவாழ்வும் எனது சமூக பொறுப்பும் இதனால் மாற்றமடைய வேண்டும், உருபெறவேண்டும், வளரவேண்டும். தவக்காலத்தில் உள்வாங்கப்படும் இறைவார்த்தையும், செயல்படுத்தப்படும் முயற்சிகளும் தொடர்ந்து வாழ்க்கையை புனிதத்தையும் முழுமையையும் நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும். வருத்தமான முகங்களும், வாடிய வயிறுகளும், பொலிவற்ற தோற்றங்களும் தவக்காலத்தின் அடையாளங்களாகிவிடாது. மன்னிக்கும் மனமும், மாற்றமடையும் குணமும், நிபந்தனைகள் அற்ற அரமும் தேவையுள்ளோரை தேடிச்செல்லும் உள்ளமும் இத்தவக்காலத்தின் அடையாளமாகட்டும். அன்புச்செய்ய முடிவெடுப்போம் அரைவயிராய் இருப்பது மட்டும் போதாது. மன்னிக்க முடிவெடுப்போம் முகம்வாடி திரிவது பயனளிக்காது. மழிக்காத முகமும் மங்களமில்லா முன்னெற்றியும் பொருள் தராது. அருள் சுரக்கும் சொற்களும் அன்பு நிறை உறவுகளும் அமைதியான தியாகங்களும் தவக்காலத்தின் முழுப்பொருளை உணர்த்திக்காட்டும், நம் வாழ்வை மாற்றும், புனிதத்தில் நம்மை வளரச்செய்யும்.

தவக்காலமென்பது இரங்கலின் காலமல்ல, இது இரக்கத்தின் காலம் என்றுணர்வோம். இக்காலத்தை பொருள்தரும் வகையில் திட்டமிடுவோம் புனிதத்தில் வளர்வோம்.

இம்மாதம் நம் மனதில் ஒளிரும் இரக்கத்தின் முன்மாதிரி, லூர்தன்னை. கோடான கோடிமக்கள், உலகின் எல்லா திசைகளிலிருந்தும் பிரான்சு நாட்டின் லூர்து நகரை நோக்கி வந்த வண்ணமே உள்ளனர். 158 ஆண்டுகளுக்கு முன் (1858) அன்னை இங்கு பெர்னதெத்து என்னும் சிறுமிக்கு கொடுத்த காட்சிகள் முதல் இங்கு நடந்துள்ள புதுமைகளும், காட்சிகளும் ஏராளம். உடல் உள்ள நலமின்மை காரணமாக வரும் துன்பங்களால் துவண்டுவிட்ட பல மக்களுக்கு குணமும் ஆறுதலும் அளிக்கும் அன்னையாய் லூர்தன்னை நமக்கு காட்சியளிக்கின்றார். இறை இரக்கத்தை உணரச் செய்கின்றார். அவரைப்பின்பற்றி உடல் உள்ள நோய்களில் வாடுவோர்க்கு நமது பரிவன்பை பகிர்ந்தளிப்போம்.

**இரக்கத்தின் ஆண்டிற்கு இம்மாத இரக்கச்செயல்:**

இம்மாதத்திலே, உங்களுக்கு தெரிந்து நீண்ட காலமாய் நோய்வாய்பட்டு துன்பப்படும் ஒரு சகோதரரையோ, சகோதரியையோ சென்று சந்தித்து அவர்களோடு நேரம் செலவழியுங்கள்.

அன்புடன்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.

# பகுதி - 1 : வழிபாட்டு வழிகாட்டி

02.02.2016 இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழா - திருப்பலி

02.02.2016 துறவற ஆண்டு நிறைவு விழா - பங்கில் திருப்பலி

02.02.2016 துறவற ஆண்டு நிறைவு விழா (சிறப்பாக துறவற இல்லங்களில் - செபவழிபாடு)

04.02.2016 தூய அருளானந்தர் திருவிழா - திருப்பலி

05.02.2016 தூய ஆகத்தம்மாள் - திருப்பலி

06.02.2016 தூய கொன்சாலோ கார்சியா - திருப்பலி

07.02.2016 ஆண்டின் 5ம் ஞாயிறு - திருப்பலி

10.02.2016 திருநீற்று புதன் - திருப்பலி

11.02.2016 தூய லூர்தன்னை திருவிழா - திருப்பலி

14.02.2016 தவக்கால முதல் ஞாயிறு - திருப்பலி

21.02.2016 தவக்கால இரண்டாம் ஞாயிறு - திருப்பலி

22.02.2016 தூய பேதுருவின் தூய பீடம் - திருப்பலி

25.02.2016 தூய அலோசியஸ் வெர்சீலியா மற்றும் தூய கலிஸ்துஸ் கரவாரியோ திருநாள் - திருப்பலி

28.02.2016 தவக்கால மூன்றாம் ஞாயிறு - திருப்பலி

# பகுதி - 2 : விசுவாசத்தில் வளர...

மீண்டும் தவக்காலம் : என்ன செய்யப் போகிறோம்?

தூய லூர்தன்னை தரும் செய்திகள்

சிலுவைப் பாதை - மனித நேயப் பாதை

திருச்சபை செய்திகள்

தூய லூர்தன்னை திருத்தலம் - பெரம்பூர், ஒரு வரலாற்றுப் பார்வை

# தீபகம் வழங்கும்

# தவக்கால சிறப்பு நிகழ்ச்சி

# கல்வாரி குடும்பங்கள்

80 நிமிட ஒலி-ஒளி சிந்தனை

## தவக்காலத்திலே இறைஇயேசுவின் பாடுகளை நம் குடும்ப வாழ்வோடு இணைந்து சிந்திக்க ஒரு முயற்சி.

உங்கள் பங்குகளில் அரங்கேற்ற தொடர்பு கொள்ளுங்கள்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.

Cell: 9840631175.

02.02.2016 இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட திருவிழா திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருச்சபையானது நம்மை குழந்தை இயேசு கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட திருவிழாவை கொண்டாட அழைப்பு விடுக்கிறது. இயேசு பாலனை அன்னை மரியாவும் தூய யோசேப்பும் ஆலயம் சார்ந்த திருச்சட்டங்களுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் கீழ்ப்படிந்தவர்களாய் இரண்டு மாட புறாக்களுடன் அவரை கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தனர். இத்தகைய பெருவிழாவை கொண்டாடும் நாம் நம்மை பற்றிச் சிந்திப்போம். நாம் திருச்சபைக்கும் அதன் சிறு அங்கமான நமது பங்கிற்கும், நிறுவனத்திற்கும் அதன் சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் கீழ்ப்படிகின்றோமா சிந்திப்போம். அப்படி இல்லாவிடில் அதற்கு தேவையான அருளைப் பெற வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம். இறைவனின் அருளைப் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உம் மகன் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட இந்நாளை கொண்டாடும் இவ்வேளையில் தங்கள் வாழ்வையே பணியாற்ற காணிக்கையாக்கிய எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசிர்வதியும். அவர்களின் உடல் உள்ள பலத்தைக் கொடுத்து அவர்களை திறம்பட வழிநடத்த வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வும் வழியுமான இறைவா, தங்களது வாழ்வில் பல்வேறு நேரங்களில் வழிதவறி நடக்கும் இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்காக மன்றாடுகிறோம். இவர்களுக்கு நல்வழிக்காட்டி மீட்பின் பாதையில் அவர்கள் பயணிக்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் வடிவே எம் இறைவா, இங்கு கூடியுள்ள அனைவரையும் உம் திருமலர்ப்பாதம் சமர்ப்பிக்கின்றோம். நாங்கள் அன்னை மரி, தந்தை யோசேப்பு தங்களையே அர்ப்பணித்து வாழ்ந்ததுபோல எங்கள் வாழ்வில் இறைவனுக்காக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**02.02.2016 துறவற ஆண்டு நிறைவு விழா - பங்கில் திருப்பலி**

**திரு. சாண்டோ**

**முன்னுரை**

ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவடுகளில் துறவு வாழ்வை போற்றும் இனியோரே, துறவற ஆண்டின் நிறைவு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம் நாம், துறவு வாழ்வு என்பது அருட்பணியாளர்களுக்கு மட்டுமல்ல நாம் ஈடுபட்டிருக்கும் குடும்பத்திலும் தூய்மையான வாழ்வு வாழும்போது நாமும் துறவு வாழ்வு மேற்கொள்கின்றோம். இன்று துறவற ஆண்டை நாம் நிறைவு செய்தாலும் ஆண்டவர் இயேசுவின் மதிப்பீடுகளின் படி நாம் வாழும் பொழுது இந்த துறவறத்தை நம் வாழ்நாள் முழுவதும் மேற்கொள்கிறோம். இன்றைய நிறைவு விழாவில் இயேசுவின் துறவு நிலையை நம்மில் தொடர்ந்து வெளிப்படுத்தவும், நமது அருள்வாழ்வுக்கு பெரிதும் உதவிபுரியும் நம் அருட்பணியாளர்கள் தங்களின் துறவற வாழ்வில் புனித நிலையை வளர்த்து நம்மிடையே நடமாடும் புனிதர்களாக வாழவும் அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. துறவிகளுக்கெல்லாம் துறவியான எம் இறைவா, திரு அவையை வழிநடத்திவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம், தங்களின் துறவு வாழ்வில் சந்திக்கும் இடையூறுகள், சவால்கள், எதிர்ப்புகளை உமது இறைவார்த்தையின் ஒளியில் நிர்மூலமாக்கி தங்களின் பணிவாழ்வில் உமது ஒளி வீசச்செய்ய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
2. துறவறத்தையும் குருத்துவத்தையும் திருநிலைப்படுத்திய எம் இறைவா, உமது பணியே எம் வாழ்வு என்று தங்களையே குருத்துவப் பணிக்காக தர தயாரித்துக் கொண்டிருக்கும் குரு மாணவர்களுக்காக மன்றாடுகின்றோம், தாங்கள் தேர்ந்திருக்கும் இப்பணி ஏழ்மையும், கற்பும், தாழ்ச்சியும் நிறைந்த வாழ்வு என்பதை உணர்ந்து தூய ஆவியின் துணையுடன் முழுமையாகவும், நிறைவாகவும், அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

3. திருக்குடும்பத்தில் துறவு நிலையை ஏற்படுத்திய இறைவா, எங்கள் குடும்பங்களை உம்பாதம் அர்ப்பணிக்கின்றோம், குடும்பங்கள் ஒவ்வொன்றும் உமது பிரசன்னத்தின் இருப்பிடம் என்பதை உணர்ந்து, தூய்மையாகவும், ஒற்றுமையுடனும், அன்பாகவும், வாழ்ந்து தங்களின் அடுத்திருப்பவருக்கு உமது அன்பை பகிர்ந்து அவர்களும் உம்மை ஏற்றுக்கொள்ள எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

4. அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்று மொழிந்தவரே, எங்கள் குடும்பங்களில் இறையழைத்தலுக்காக செபிக்கின்றோம், "என் பணிக்காக யார் போவார்" என்று தாகத்தோடு மொழிந்தவரே, எங்கள் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு உமது அன்பையும், உமது பணியின் மேன்மையையும் எடுத்துக் கூறி அவர்களின் உள்ளத்தில் இறையழைத்தலை உணரவைக்க எங்களுக்கு கற்றுத்தாரும். இறைப்பணியே முதன்மையானது என்பதை நாங்கள் உணர வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

02.02.2016 **துறவற ஆண்டு நிறைவு விழா** (சிறப்பாக துறவற இல்லங்களில் செபவழிபாடு)

திரு. சாண்டோ

மு: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ஆமென்.

**முன்னுரை**

இறையேசுவில் அன்புள்ளவர்களே, இன்று நாம் துறவற ஆண்டை நிறைவு செய்கின்றோம். நம் ஆண்டவர் இயேசுவின் துறவறத்தை ஏற்றிருக்கும் நம் உள்ளத்திலும், உடலிலும் தூய்மையான துறவு மேற்கொள்ள நம் அன்னையின் பரிந்துரையையும் அனைத்து புனிதர்களின் உதவியையும் நாடுவோம் நம் மூத்த சகோதரன் இயேசுவின் அருளோடும் தூய ஆவியின் துணையோடும் இவ்வழிபாட்டில் பங்கேற்போம்.

**தூய ஆவியாரின் பாடல்: இயக்கம் அளிக்கும் ஆவியே...**

**மன்னிப்பு வழிபாடு:**

ஆண்டவர் இயேசுவின் மனநிலையை நம் உள்ளத்தில் கொண்டு நமது துறவு வாழ்வில் இந்த ஆண்டு பலவிதங்களில் நம்மிடம் மாற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளை நம் ஆண்டவர் ஏற்படுத்தி தந்திருந்தாலும் அந்த வாய்ப்புக்களை ஏற்காமல் மாற்றத்தை உணர்ந்துக் கொள்ளாத நிலையை நினைத்து ஆன்ம சோதனை செய்து பார்ப்போம். (15 வினாடிகள் அமைதியாக சிந்தித்தல்)

**மன்னிப்பு பாடல் :**

நம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகள் நம்மை நெறிப்படுத்த அவரின் குரலுக்கு செவிமடுப்போம். யோவான் 13:12-16

**பாடல் :** நல்ல இதயம் ஒன்று தா...

**சிந்தனை :** துறவு வாழ்வானது
எளிதல்ல அரிதும் கூட
துறவு பணியானது
சுகமும் சுமையும் கூட
துறவு இலக்கானது
பொதுவல்ல தனி வரம் கொண்டது
துறவு இறப்பானது
அமைதியல்ல அன்புறவும் கூட
துறவு வரலாறானது
இருளல்ல ஒளியானது பணிவாழ்வில் பங்கேற்பது
திருத்தூதராகவே வாழ்வது...

பாடல் வழியாக நம் அர்ப்பணத்தை அளிப்போம். (எரியும் மெழுகு திரிகளுடன்) சம்மதமே இறைவா...

**மன்றாட்டு :** பதில் : மன்றாடும் எமக்கு மனமிறங்கும் இறைவா...

1. இறைவா உமது பணியை செய்ய வந்துள்ள எங்களுக்கு உம் தூய ஆவியின் துணையை எப்போதும் தந்தருளும்.
2. எம் பெற்றோர் உடன்பிறந்தோர் சுற்றத்தார் அனைவரையும் விடுத்து நீயே எல்லாம் என்று வந்துள்ள எங்களை எதிரிகளிடமிருந்து காத்தருளும் இறைவா.
3. உணவையோ உடையையோ ஆடம்பரத்தையோ எதிர்பாராமல் உம் அன்பையே ஆடையாக கொண்டு வாழும் எங்களை தீராத நோய்கள் அணுகாமல் பாதுகாக்க இறைவா உம்மை வேண்டுகின்றோம்.
4. இறைவா சொந்த நிலமோ, வீடோ, நிரந்தர இருப்பிடமோ எதிர்பாராமல், நீர் எங்களுக்கு கட்டளையிட்டுள்ள பணித்தளத்தையே எங்கள் வீடாக பாவித்து பணிசெய்யும் எங்களை இடி, மின்னல், பூகம்பம், திருடர்கள், இயற்கையின் சீற்றங்களிலிருந்து பாதுகாத்து அச்சமின்றி பணிசெய்ய உமதருள் தர வேண்டுகிறோம்.

**செபிப்போமாக:** இறைவா, துறவற ஆண்டின் நிறைவிலே எங்கள் துறவறத்தை புதுப்பிக்கும் ஆண்டாக அமைத்துக் கொடுத்தற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். பிறந்திருக்கும் புதிய ஆண்டில் உமது இரக்கப் பெருக்கத்தினால் அருள் பெற்று துறவறத்தில் மேன்மைக் காணவும் உமது இரக்கத்திற்கு சான்று பகரவும் உம் திருமகன் இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்

**அன்னை மரியாள் பாடல் :** மாதாவே துணை நீரே...

## 04.02.2016 தூய அருளானந்தர் திருவிழா திருப்பலி

**S. கிறிஸ்டி**

**முன்னுரை**

இறையேசுவில் நிறையன்புள்ளவர்களே, இன்று தாயாம் திருச்சபை மறைசாட்சியான **புனித அருளானந்தர்** விழாவினை சிறப்பிக்கிறது. ஜான் பிரிட்டோ என்றழைக்கப்படும் நம் புனிதர் புகழ் பெற்ற போர்த்துகீசிய உயர் குடும்பத்தில் **1647 மார்ச் 1ம் தேதி லிஸ்பன் நகரில்** பிறந்தவர். இவருடைய தந்தை **சால்வடோர் பிரிட்டோ பெரீரா** போர்த்துக்கல் நாட்டின் காலனியாக இருந்த பிரேசிலின் ஆளுனராக இருந்தவர்.

ஜான் பிரிட்டோ **1662 ஆம் ஆண்டு இயேசு சபையில்** சேர்ந்து **கொயிம்பிரா பல்கலை கழகத்தில்** கல்வி கற்றார். 1963ல் தென்னிந்தியாவில் தமிழகத்தில் மதுரை மாநகரில் மறைப்பரப்பு பணிக்காக தனது கால் பதித்தார். அங்குதான் ஜான் பிரிட்டோ என்ற தனது பெயரை தமிழில் **அருளானந்தர்** என மாற்றிக் கொண்டார்.

மறவர் சீமை மன்னரால் ஐரோப்பாவுக்கு நாடுகடத்தப்பட்டு பின்னர் 1690ம் ஆண்டு மீண்டும் மதுரைக்கு வந்தார். மதுரையில் அவர் இந்து சமய துறவிகளைப் போல மஞ்சள் நிற ஆடை உடுத்தி, இறைச்சி உண்ணாமை, மது அருந்தாமை போன்ற பழக்க வழக்கங்களை பின்பற்றினார். கத்தோலிக்க நெறிமுறைகளை பாமர மக்களுக்கு புரியும் விதத்தில் எடுத்துரைத்தார். **வீரமாமுனிவர் என்றழைக்கப்பட்ட இராபர்ட் தே நொபிலி** பின்பற்றிய எளிமையான போதனா முறைகளையே இவர் தனது நற்செய்தி அறிவிப்பு பணியில் பின்பற்றினார்.

திருத்தந்தை 9ம் பத்திநாதரால் 1853 ஆகஸ்ட் மாதம் 21ம் தேதி நம் புனிதருக்கு அருளாளர் பட்டமும் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்களால் 1974 ஜீன் 22ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது. இவர் **போர்த்துக்கல் நாட்டின் சவேரியார்** என்றும் அழைக்கப்பட்டார்.

1693ல் தென் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் ஓரியூரில் தலை வெட்டப்பட்டு இறந்தார் திருச்சபையில் அந்த நாளை ஆண்டு தோறும் புனிதரின் விழாவாக கொண்டாடப்படுகிறது.

எனவே, புனிதரின் அஞ்சா நெஞ்சமும் அயராத உழைப்பும் இன்று நம் அனைவரின் விசுவாச வாழ்விற்கு சிறப்பான படி கற்களாக அமைந்திருக்கின்றன. நமது வாழ்வின் அனைத்து நிலைகளிலும்

இறைப்பற்றுதலோடும் தாழ்ந்த உள்ளத்தோடும் இறையருளைப் பெறுவோம் நம் குடும்பங்களை இறைவன் தம் புனிதர் வழியாக ஆசீர்வதிக்கவும் துணிவோடு ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சிகளாக மாறுவோம் என்ற விசுவாசத்தோடு இன்றைய திருவழிபாட்டில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஆறுதலின் தெய்வமே எம் இறைவா, எம் தாயாம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் யாவரும் இறையாட்சியின் மதிப்பீடுகளை இவ்வுலகில் மலரச் செய்யும் சொல்லேற் உழவர்களாக திழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

2. அனைத்துலகின் மீட்பரான ஆண்டவரே எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் தலைவர்கள் அனைவரும் நீதியிலும் அன்பிலும் கலங்கமில்லா அமைதியான நல்லாட்சிப் புரிந்திடவும், புனித அருளானந்தரின் முன்மாதிரியை பின்பற்றி துணிவோடும் நல்ல ஞானத்தோடும் பிறரன்பு செயல்களில் சிறந்திட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பே உருவான எம் இறைவா, எம் பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களையும் நீர் நிறைவாக ஆசீர்வதித்தருளும். தம் வாழ்வையே ஓர் நற்செய்தியாக வாழ்ந்து காட்டிய தூய அருளானந்தரின் பரிந்துரையினால் நாங்கள் உமது இறைவார்த்தைகளை ஞானத்தோடு கற்றுக் கொள்ளவும் இறை நம்பிக்கையில் வளர்ச்சிப் பெற்று விண்ணகத்தின் முன்சுவையை மண்ணகத்திலே கண்டு மகிழவும் எங்கள் குடும்பங்களில் இறை இரக்கத்தின் சாட்சிகளாகத் திகழ்ந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. காக்கும் வல்லமையுள்ள எம் இறைவா உலகெங்கும் உள்ள கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் , எளியோர், விதவைகள் அனைவருக்கும் நீர் உமது இறைபராமரிப்பையும், பரிவன்பையும் நிறைவாக பொழிந்துக் காத்திடவும் உமது அன்பான பாதுகாப்பில் தங்களின் அனைத்து துன்பங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுபட்டு துணிவோடு உம்மை மகிமைப்படுத்த தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம.

5. ஞானத்தின் ஊற்றான எம் ஆண்டவரே, குழந்தைகளுக்கு உமது அளவில்லாத அன்பையும், சிறார்களுக்கு நல்ல ஞானத்தையும் இளையோருக்கு நல்ல எதிர்காலத்தையும், வழிக்காட்டுதலையும் முதியோருக்கு நல்ல பாதுகாப்பையும் கொடுத்து உமது இறை பிரசன்னத்தை நாளும் உணர்ந்து உம்மிலே நிறைவு பெற்றுக் கொள்ளத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**05.02.2016 தூய ஆகத்தம்மாள் திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

முன்னுரை

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் தூய ஆகத்தம்மாள் கி.பி. 251ல் வாழ்ந்தவர். கடவுளிடம் அன்பும், பக்தியும், கொண்டவர். உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த நாட்டின் ஆளுநர் குயிந்தானூஸ் என்பவன் இவரது வசீகர அழகினால் கவரப்பட்டு பாவ வாழ்க்கைக்கு கட்டாயப்படுத்தினான். ஆனால் புனித ஆகத்தம்மாள் அவன் அழைப்புக்கு இணங்கவில்லை ஆதலால் அவரை சிறையில் தள்ளினான். தன்னுடைய வலையில் விழவைக்க வேறோரு பெண்ணையும் அவரிடம் பேசவைத்தான். கற்புநெறியை உயர்வாக மதித்த நம் புனிதை மறுத்து விட்டதால் இவரின் மார்பகங்களை வெட்டும்படி கட்டளையிட்டு கொடூர செயலை புரிந்தான். ஆனால் இரவில் புனித இராயப்பர் இவருக்கு தோன்றி இவரை சுகப்படுத்தினார். மேலும் அந்த கொடூர ஆளுனர் இவரை கூரிய கற்களின்மீதும் எரியும் நிலக்கரியின் மீதும் உருட்ட செய்தான். அனைத்து தேவனைகளையும் சகித்துக்கொண்டு சிறையில் செபித்துக் கொண்டிருந்த வேளையில் இவரது உயிர் பிரிந்தது.

தூய ஆகத்தம்மாள் செபித்த "இயேசு கிறிஸ்துவே அனைத்துக்கும் நீரே ஆண்டவர். நான் உங்கள் மந்தையின் ஆடு. சாத்தானை ஜெயிக்க என்னை தகுதியுள்ளவராக்கும்" என்ற வார்த்தைகளை மனதில் நிறுத்தி தூயவராக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உலகின் ஒளியே இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால்துறவியர், பொதுநிலையினர் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனின் அருள்பெற்று திருமுழுக்கின் மூலம் பெற்ற விண்ணக வாழ்வை, அகிலமெங்கும் பரப்ப அனைவரும் தகுதியுள்ளவர்களாகும் பொருட்டு தம் தகுதிக்கேற்ற கடமைகளை கண்ணுங்கருத்துமாக ஆற்றவேண்டிய மனோபாவத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. திக்கற்றவர்களின் சரணாலயமே இறைவா பசி, பிணி, பஞ்சம் இவைகளை தங்கள் உரிமைகளாக பெற்றுள்ள எளிய மக்களை இறை இரக்கத்தின் காலமாகிய இந்நாளில் கண்ணோக்கியருளும். கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களை கைவிடாதேயும். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை" என்ற உம் திருவாக்கின்படி கருணைக்கூர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவிகளின் அடைக்கலமே இறைவா,தீமைகள் பெருகி வரும் இக்கால சூழலில் பாவத்தின் சுவடுகள் எங்கள் தலைமுறையினரை அணுகாவண்ணம் தெளிந்த மனதையும், தீர்க்கமான அறிவாற்றலையும் அவர்களுக்கு அளித்து தங்களை பாதுகாத்து கொள்ளும் மனப்பக்குவத்தை அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதி அருள்கின்ற இறைவா, பிலாத்துவின் கொடூர தீர்ப்பினால் மாசில்லா மாணிக்கமான நீரே எங்களுக்காக பாடுகளை அனுபவித்து உயிர் துறந்தீர். தவறே செய்யாமல் சந்தர்ப்ப சூழ்நிலையினால் சிறையில் வாடும் ஒருசில மனித உயிர்களுக்கு இரக்கம் கொண்டு ஆறுதலும், தேறுதலும் தந்து மன அமைதியுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**06.02.2016 தூய கொன்சாலோ கார்சியா திருப்பலி**

திரு. L. தாமஸ்

முன்னுரை

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, மும்பையில் உள்ள வசை நகரில் போர்த்துக்கீசிய தந்தைக்கும், இந்தியன் தாய்க்கும் பிறந்த புனித கொன்சாலோ கார்சியாவின் நினைவு நாளை நமது தாய்த்திருச்சபை இன்று கொண்டாடுகிறது. பிரான்சிஸ்கன் சபை சகோதரரான இவர் தொழுநோயாளிகளோடு சேர்ந்து பணியாற்றினார். இவரின் இறைப்பற்றுறுதியே இவரை புனிதராக உயர்த்தியது என்றால் மிகையாகாது. இவரின் தாழ்ச்சியும், பொறுமையும் இவரின் பணிகளில் வெளிப்பட்டது என்று இறைவனோடு நாம் ஒன்றித்து செயல்படுகிறோமோ அப்போதே நமது பணிகளும் தூய ஆவியின் வழி நடத்துதலோடு இருக்கும் என்பதை புனித கொன்சாலோ கார்சியாவின் வாழ்வில் காணலாம். எனவே, நாமும் நமது அன்றாட வாழ்வின் அசைவுகளை இறைத்திட்டத்திற்கு ஏற்ப இயக்கினால் நம் வாழ்வும் அன்பர் இயேசுவின் வாழ்வோடு இணையும். இதற்கு தடையாய் உள்ள நமது பலவீனங்களை நினைவு கூர்ந்து அதனால் ஏற்பட்ட பாவங்களுக்காக தந்தையாம் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பும் பொறுமையும் கொண்ட இயேசுவே, இன்றைய உலகில் அக்கிரமும், அராஜகமும் அதிகரிக்க காரணமான அன்பு பற்றாக்குறையை தீர்க்க நீர்தாமே உமது பிள்ளைகளான எங்கள் மூலமாய் நிபந்தனையற்ற அன்பை இந்த உலகிற்கு தர எங்களை பக்குவப்படுத்துமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. காணும் இடமெல்லாம் புதுப்புது நோய்கள் தோன்றும் அளவுக்கு சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் ஒவ்வொருவருக்காகவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உமது எல்லையற்ற அன்பினால் படைக்கப்பட்ட இந்த பூமியும் இயற்கையும் அழியா வண்ணம் நாங்கள் பாதுகாக்கும் ஞானத்தை எங்களுக்கு தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. என்றும் பரிவுடன் எங்களை காணும் நல்ல நண்பரான இயேசுவே, எதையாவது யாரிடமாவது எதிர்பார்க்கும் எங்களின் மனநிலையை மாற்றி, எப்போதும் எல்லோருக்கும் அன்புடனும், பரிவுடனும் கொடுத்து உதவும் மனநிலையை தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**07.02.2016 ஆண்டின் 5ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, திருவருகைக்காலம் நிறைவுற்று தவக்காலத்தில் நுழையும்முன் இரண்டுக்கும் இடையில் பொதுக்காலம் 5ம் ஞாயிறை இன்று நாம் இத்திருப்பலியில் பங்கேற்று பலன்பெற கூடி வந்துள்ளோம். திருஅவை ஒவ்வொரு காலமாக வகுத்து அக்காலங்களில் அழகாக ஒரு மையக்கருப்பொருளை கொடுத்து நம்மை சிந்தித்து செயல்பட அழைக்கிறது. இன்றைய மையக்கருத்து "அழைப்பும் நம்பிக்கையும். அழைக்கப்பட்டவர்கள் முதலில் தயங்கினாலும் பயந்தாலும் பிற்காலத்தில் ஊக்கமுடன் பணியாற்றினார்கள். முதலில் மோசே திகைப்பும், பயமும் மேலிட ஏதேதோ சொல்லி தப்பிக்க எண்ணினார். ஆனால் பணி ஏற்றுக்கொண்ட நிலையில் எத்தனை உன்னதமான விடுதலைத் தலைவராகத் திகழ்ந்தார். (வி.ப. 3) தந்தையாம் கடவுள் எசாயாவைத்தொட்டு குற்றப்பழியை நீக்கியப்பின் எத்தகைய பணியை ஆற்றினார். எரேமியாவும் தான் சிறுபிள்ளை என தவிர்க்கப்பார்த்தார். இறைவன் அவரையும் உயர்த்தினார். மீட்புத்திட்டத்தில் பங்கேற்க அன்னைமரிக்கு அழைப்பு வந்தபோது கலங்கினார். ஆனால் இன்று உலகத் தாயாக திகழ்கிறார். பேதுருவும் அதிக மீன்படுவதைக்கண்டு கலங்கி திகைப்புற்று "பாவியை விட்டு போய்விடும்" என கூறுகிறார். இறைஇயேசு அவரை திருஅவைத் தலைவராக உயர்த்தினார். புனித பவுலடிகளாரை அழைத்தபோதும், இருளையும், பயத்தையும் உணர்ந்தார். ஆனால் அவரை ஒரு சிறந்த நற்செய்தி அறிவிப்பாளராக இறைவன் உயர்த்தினார். நம்மையும் இறையழைத்தலில் திருமுழுக்கு வழியாக இங்கு அழைத்துள்ளார். இந்த இறையழைத்தலை பக்தியோடு, நம்பிக்கையோடு அணுகினால் இறைவன் நம்மை உயர்த்துவார். அதற்காக இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தூய பவுலடிகளார் போல நற்செய்தி அறிவிக்க அழைக்கப்பட்ட எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறைவன் அழைத்த அருள் வீணாகவில்லை என அவரைப்போல உரத்த குரலில் கூறவும் எல்லோரும் இறைமக்களாக நம்பிக்கையின் மக்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் வடிவே இறைவா, பொதுநிலையினர் பலர் பல நிலைகளில் நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் கலக்கம், பயம், இயலாமை சூழும் நேரங்களில் காத்து, அரவணைத்து அவர்களையும் குடும்பங்களையும் செய்கின்ற எல்லாப் பணிகளையும் நிறைவாக ஆசிர்வதித்து வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாக்கும் இறைவா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் விவசாயிகளையும், வியாபாரிகளையும், தொழிற்சாலை அலுவலங்களில் பணிபுரிவோர் அனைவரையும் துன்பங்களிலிருந்து விடுவித்து மனதைரியம், ஆற்றல் கொடுத்து "இதோ நான் இருக்கிறேன்" உங்களுக்கு உதவ என ஓடோடி வந்து உதவிட வேண்டும். அதனால் அவர்கள் துன்பங்களிலிருந்து விடுபட்டு உமது அருளையும் ஆறுதலையும் பெற்று வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**10.02.2016 திருநீற்று புதன்** **திருப்பலி**

திரு. லூயிஸ் சகாய ராஜ்

**முன்னுரை**

இறையன்பில் இனியோரே, இறைத்தந்தையின் இரக்கத்தால், அவரது பிள்ளைகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், அந்த உரிமை நிலையை காத்துக் கொள்ளத் தவறியதால், பாவ இயல்பை அணிந்து கொண்டோம். அதனால், நமது சுயத்தையிழந்து பயத்தை அறுவடை செய்து பாவ இருளில் ஒளிந்து கொண்டோம். தம்மீதும், தம் ஒரே மகன்மீதும் நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல், நிலைவாழ்வு பெற விரும்பிய நம் இரக்கத்தின் இறைத்தந்தை, நம்மைமீட்டு, ஒளிர்விக்க நமக்காக தம் ஒரே மகனை இரக்கத்தின் பலியாக விலையாகக் கையளித்தார். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட இறையருளை இழக்கும்போதெல்லாம் இறைவனின் இரக்கம் நம்மை மேலும் இறுக்கிப் பிடிக்கின்றது அவரது பாடுகள் நம் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்றது.

இதோ மேலும் ஓர் இரக்கத்தின் காலம். இறைவனின் இரக்கத்தை நாம் அனுபவிக்க நாம் ஒன்றுமில்லா நிலைக்கு நம்மை இறக்கிட வேண்டும். அதன் அடையாளமாகவே நமது நெற்றியில் இன்று சாம்பல் பூசப்படுகின்றது. நமக்கு எல்லாம் இருக்கின்றது என்ற இறுமாப்புடன் வாழ்ந்த வாழ்வு ஒரே இரவில் மழை வெள்ளத்தில் உருமாறிப் போனதல்லவா? பொறுத்ததுபோதும் இத்தவக்காலமாவது நம்மை மாற்றட்டும். நம் இதயங்களை இரக்கத்தின் ஊற்றில் நனைய விடுவோம். பாவக்கறைகள் கழுவப்படட்டும், வாழ்வின் தடைகள் உடைக்கப்படட்டும். நமது ஒன்றுமில்லாமையை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நிறைவான அமைதி நம் இதயத்தில் தங்கும், இரக்கத்தின் அருள் நம் மனங்களில் பொங்கும்.

தவம் செய்வோம், தானம் செய்வோம்

தளர்ந்து போகாமல் செபம் செய்வோம்

தவக்காலத்தில் மட்டுமல்ல-நாம்

சவமாகும் காலம் வரை.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, இறைஇரக்கத்தின் யூபிலி ஆண்டில் திருச்சபை முழுவதிலும் இரக்கத்தின் அருள் பொங்கி வழியவும் திருத்தந்தையின் கருத்துக்களுக்கேற்ப, திருச்சபை பிரதிநிதிகள் செயல்படவும், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் வாழ்வு மேலும் தூய்மையாக்கப்பட்டு பொதுநலன் பேணப்படவும் அருள்புரிந்து இத்தவக்காலத்தில் வழிநடத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தந்தையே இறைவா, தவக்காலம் இறைஇரக்கத்தின் காலம் என்பதை உணர்ந்து எமது பாவ இயல்பைக் களைந்து, புண்ணியம், கண்ணியம் நிறைந்த திண்ணிய வாழ்வு வாழ்ந்திட உமது இரக்கத்தை எம்மேல் பொழிந்து எமது குறைகளிலிருந்து விடுவித்து, மனதில் அமைதியைக் கொடுத்து, அர்த்தமுள்ள வகையில் தவக்காலத்தை கடந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்புத் தந்தையே இறைவா, இத்தவக்காலமும் பத்தோடு பதினொன்றாய் எம்மிடையே கடந்து போகாமல், எக்காலமும் செபம், தவம், தானம் செய்யும் நன்மையின் காலமாக அமைந்திடவும், தவக்காலத்தில் நாங்கள் காட்டும் விசுவாசம், நாங்கள் எடுக்கும் தவ ஒறுத்தல் முயற்சிகள், நாங்கள் செய்யும் தான-தர்மங்கள் கடைபிடிக்கும் ஒழுக்கப் பண்புகள் ஆகியவற்றை வாழ்நாள் முழுவதும் செய்து மகிழவும் எம்மைப் பக்குவதப்படுத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்புத் தந்தையே இறைவா, மாற்றத்தைக் காணச் செய்யும் காலமாகிய இத்தவக்காலத்தில், பிறரை மாற்றுவதைவிட தன்னை மாற்றிக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்தவும், தனிமனித மாற்றமே, சமூக ஒழுக்கம் என எல்லா நிலைகளிலும் கடமைகளை கனிந்த மனதுடன் செய்யும் பண்பை பெற்றிடவும் எம்மைத் தகுதிப்படுத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.
5. அன்புத் தந்தையே இறைவா, சிலுவை மரணத்தை சிறப்பானதாக்கி, உயிர்ப்பினால் எங்களை மீட்பின் மகிழ்வில் இணைத்த நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகளை தியானிக்கும் நாங்களும், மடிந்து போகாமல் உயிர்ப்பில் இயேசுவுடன் பங்கேற்போம் என்ற நம்பிக்கையில் என்றும் நிலைத்திருக்க இத்தவக்காலம் எமக்கு பயிற்சிக் களமாக அமைந்திட உமது அருள்பொழியுமாறு மன்றாடுகிறோம்.

**11.02.2016 தூய லூர்தன்னை திருவிழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மன்னன்

**மனந்திரும்புங்கள் - தவமிருந்து செபியுங்கள்**

**முன்னுரை**

உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டில் நூறு ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போரில் மக்கள் நிலைகுலைந்து சிதறி குழப்பத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். பிரெஞ்சுப் புரட்சியில் தகுதியான தலைமை இல்லாது வழிதவறி தவித்தனர். நெப்போலியனின் போர் வெறி குணத்தால் நாடு தத்தளித்துக் கொண்டிருந்தது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில்தான், லூர்து நகர் எனும் ஊரில் மெசபியேல் மலைக்குகையில் அன்னை மரியா, சிறுமி பெர்னதெத் சௌபிரிஸ்க்கு 1858ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் காட்சி கொடுத்தார். காட்சியில் "நாமே அமல உற்பவம்" எனத் தம் பெயரையும் வெளியிட்டார். மக்களனைவரும் மனந்திரும்ப வேண்டும். தவம், செபம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மக்களுக்கு மாதா பக்தி அதிகமாக வளர்ந்தது. நாட்டில் அமைதியும் வளமான வாழ்வும், இறைவழிபாட்டில் நாட்டமும் அதிகரித்தது. சிதறிக் கிடந்த மக்கள் ஒன்று கூடி லூர்துநகர் நோக்கிப்பயணமாகினர். வாழ்க்கையில் வசந்தம் வீசுவதைக் கண்டு இறை இயேசுவுக்கு நன்றி கூறினர்.

திருத்தந்தை 9ம் பத்திநாதர் (the dogma of the immaculate Conception of the Blessed Virgin Mary) 1854ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் நாள் 200கர்தினால்கள், மற்றும் ஏராளமான ஆயர்கள் கூடிய அவையில் மரியா, ஜென்மப் பாவமில்லாமல் பிறந்தார் என்பதைப் பிரகடணப்படுத்தினார். நான்கே வருடங்களுக்கு பிறகு அன்னையே லூர்துநகரில் தோன்றி, "நாமே அமலோற்பவம்" என்று அறிவிக்கப்பட்ட உண்மையை உறுதிப்படுத்தினார். அன்னை மரியா போன்று, லூர்து நகரின் தாரக மந்திரமான தவம் செய்வோம், செபம் செய்வோம். இந்த தவக்காலம் நம்வாழ்விலும் அர்த்தமுள்ளதாக, அன்னை மரியாவின் வழியில் அமைய இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கமே உருவான இறைவா, உமது இரக்கப்பெருக்கத்தால் கிறிஸ்துவின் மறை உடலாம் திருச்சபையை பேணிக்காத்து, நவீன உலகில் மக்களோடு நெருக்கமாகி வழி நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை பிரான்சீஸ், அவருடைய வழிகாட்டுதலில் வாழ்வை ஏற்று நடத்திச் செல்லும் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் நிறைவாக ஆசிர்வதித்து, நிறைவாழ்வை நோக்கித் தங்களின் மேலான அழைப்பிற்கேற்ப வாழ தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்பி வழி நடத்தி வாழ்வளிக்க வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் இறைவா, இன்று உலக நோயாளிகள் தினத்தைச் சிறப்பித்து, வானக மருத்துவராகிய உம்மிடம் உடல்நோய், மனநோய், ஏழைகள், அனாதைகள், முதியோர், மருத்துவர்களால் கைவிடப்பட்டோர், அனைவரையும் உம் கையில் ஒப்படைக்கின்றோம். விசுவாசத்துடன் லூர்துநகர் செல்லும் அனைவரும், உம் இரக்கத்தின் அசீரை அன்னை வழியாகப் பெற்று, அளவில்லா மகிழ்ச்சியுடனும், சமாதானத்துடனும் உம் சித்தப்படி சாட்சிய மக்களாக வாழ லூர்தன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் தந்தையே, துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காக மன்றாடுகிறோம். நீர்தாமே அவர்களுக்கு ஆறுதலாக இருந்து அரவணைத்து விசுவாசத்தில் தடுமாற்றம் அடையாமல் வன்முறை, தீவிரவாதம், இனவெறி, பதற்றநிலை ஆகிய சூழ்நிலைகளை உம் திருப்பாடுகளோடு இணைத்து கிறிஸ்துவ சாட்சிய வாழ்வு வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. குடும்பங்களின் மையமே இறைவா, இன்றைய நெருக்கடியில் மாறிவருகின்ற உலகத்தில் சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கும் திருச்சபையிலும், குடும்பங்களிலும் அழைப்பின் மேன்மையுணர்ந்து குடும்பங்கள் ஆற்ற வேண்டிய கடமையையும், பணியையும் பங்குத்தளங்களிலும், அன்பியங்களிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் முன்னிறுத்தி, ஒரே நம்பிக்கையின் குடும்பமான திருச்சபையை கட்டியெழுப்பி, நம்பிக்கையில் நிலைப்பெறவும் தூய ஆவியாரின் ஆற்றல் நிறை இறைச் சமூகமாய் நாங்கள் வளம்பெறவும், வரமருள வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

5. இளையோரின் வழிக்காட்டியே இறைவா, இளைஞர்கள் அவர்களது ஆற்றலையும், அவர்களது கிறிஸ்துவ பொறுப்பையும் உணர்ந்து நிறைவாழ்வை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை உணரச் செய்து, கத்தோலிக்க வாழ்க்கையில் உமது சாட்சிகளாக, வாழ்வதற்கான வரங்களை பொழிய வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**14.02.2016 தவக்கால முதல் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

தவக்கால முதல் வார ஞாயிறு திருப்பலியில் பங்கேற்று இறைவனின் இறை இரக்கத்தைப் பெற வந்திருக்கும் உங்கள் அனைவரையும் கிறிஸ்துவின் பெயரால் வரவேற்கின்றோம். இறையேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு எனும் பாஸ்கா நிகழ்வுதான் நம் மீட்பின் உச்சக்கட்டம். நம் நம்பிக்கையின் மையம். இறையேசுவின் பாடுகளில் பங்கேற்று, பாஸ்கா விழாவைத் தகுதியுள்ள முறையில் கொண்டாட நம்மைத் தயார் செய்யும் காலமே தவக்காலம். இது மனமாற்றத்தின் காலம் இறைவனோடும் பிறரோடும் உள்ள உறவை சரி செய்து கொள்ள இதுவே தகுந்த காலம். நாம் மனம்மாறி ஒப்புரவாகி, இறை இயேசுவின் பாடுகளைத் தியானித்து திருவழிபாட்டில் ஈடுபாடோடு, பங்கேற்று, பாவமன்னிப்பும், நற்கருணையும் பெறுவது முதலியன உள்ளார்ந்த செயல்பாடுகள்.

இதோடு நின்றுவிடாமல் நாம் செய்யும் ஒறுத்தல் முயற்சிகள், நோன்பு, நற்செயல்கள் என்பன மக்களின் துயர் துடைத்து அவர்களை ஆதிக்கச் சக்திகளிலிருந்து விடுவித்து மனித மாண்புடன் வாழச் செய்ய வழிவகுக்கும் வெளியார்ந்த செயல்பாடுகள். வழிபாடுகளோடு இதுபோன்ற செயல்பாடுகளினாலும் இறைஇரக்கத்தைப் பெற்று வளமாக்குவோம். பிறர் வாழ்வையும் உயர்த்துவோம் என்ற எண்ணத்தோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவைமீது இரக்கம் வையும். உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட உம் திருப்பணியாளர்கள் அனைவரையும் பாதுகாத்துக் கொள்ளும். உமது உரிமைச் சொத்தை வேற்று இனத்தார் மத்தியில் நிந்தைக்கு ஆளாக்காத வண்ணம் கடவுளே உமது பேரார்வம் கொண்டு உம் பணியாளர்கள்மீது கருணைகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. குடும்பத்திற்கு அரசரான இறைவா, எங்கள் குடும்பம் மட்டுமல்ல அனைத்து குடும்பங்களும் இந்த தவக்காலத்தில் உள்ளார்ந்த மனமாற்றம் பெற்று உறவுகளை சரிசெய்து மகிழ்ச்சியோடும் சமாதானத்தோடும் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. எம்மீது கொண்ட அன்பினால் உமது ஒரேபேறான மகனையும் கையளிக்க திருவுளமான எம் இறைவா, உண்மையான உம் பிள்ளைகளாய் தியாக உணர்வோடும் விட்டுக்கொடுக்கும் மனதோடு உள்ளார்ந்த பாசத்தோடும் வாழ்ந்து உமது அரசின் குடும்பங்களாய் இத்தவக்காலத்தில் மனம்மாறி வளர வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றே இறைவா, பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் அனைவரையும் நல்ல ஞாபக சக்தியோடு படித்து தேர்வு எழுதி தங்கள் எதிர்கால வாழ்வை நல்ல வழிகளில் அமைத்துக்கொண்டு வாழ வேண்டிய எல்லா அருளையும் ஆசிரையும் வழங்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**21.02.2016 தவக்கால இரண்டாம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நாம் தவக்கால இரண்டாம் ஞாயிறில் இருக்கிறோம். நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை தியானித்து "ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு" என்ற ஆறுதலில் இருக்கிறோம். தொடக்க நூலில் விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமுக்கு ஆண்டவர் அளித்த உடன்படிக்கையின் நம்பிக்கையிலும், உரிமைபேற்றின் வழி மரபிலும் உள்ளோம். தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய மடலில் "நீங்கள் அனைவரும் என்னைப்போல வாழுங்கள் நாங்கள் உங்களுக்கு காட்டிய முன்மாதிரிகையின்படி வாழ்பவர்களை பின்பற்றுங்கள். அவர் காட்டிய தூய ஆவியின் கட்டளைப்படி நாம் நடக்க கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் கிறிஸ்தவ நெறி என்பது சட்டம் சார்ந்தது அல்ல, வாழ்க்கை முறையைச் சார்ந்தது. தூய ஆவியானவரால் நமதாண்டவரின் வழிகாட்டுதலில் நம்பிக்கையின் உடன்படிக்கையில் வாழ்வோம் என்ற சிந்தனையுடன் இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பேரிரக்கத்தின் நாயகனே இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து கிறிஸ்துவுக்கு சான்று பகரும் சாட்சிய வாழ்வு வாழவும், ஒருவருடன் ஒருவர் மனந்திறந்து உள்ளன்போடும், இரக்க உணர்வோடும் கிறிஸ்துவில் உண்மையான நம்பிக்கை கொண்டு வாழவும் உம்மை மன்றாடுகிறோம்.

2. பேராற்றலின் வடிவமே இறைவா, இத்தவக்கால மேன்மையை பிற சமய மக்களும் உணர்ந்து இயேசுவின்பால் ஈர்க்கப்பட வேண்டி எங்களது பக்திமுயற்சிகள், உண்மையான உந்துதலுடனும் உமது ஆற்றலுடனும் பரவ செய்யும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. பேரன்பின் திலகமே இறைவா, நாட்டில் நடக்கும் பலவித தாக்கங்களினால் நிலைகுலைந்து போயிருக்கும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டிய கொடைகள், உதவிகள் அனைத்தும் அவரவர்களின் தேவையான நேரங்களில் கிடைக்க வேண்டிய அவசியத்தை நாட்டு பொறுப்பாளர்கள் உணர்ந்து அன்பின் பரிமாணத்தை விரைவில் அளிக்க உம்மை மன்றாடுகிறோம்.

4. பேராறுதலின் தந்தையே இறைவா, எத்துயர் வரினும் உமது திருவுளத்தை ஏற்று உம்மை நம்பும், அன்பு செய்யும், உம்மை உறுதியுடன் பற்றிக் கொண்டிருக்கும் எளிய மக்களுக்கு மேலும் துன்பங்கள் வராமல் காத்து வழிநடத்தும்படியும், ஆறுதல் பெறக்கூடிய வழிவகைகளை நீர்தாமே விரைந்து செய்து ஆசீர்வதிக்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**22.02.2016 தூய பேதுருவின் திருப்பீடம் திருப்பலி**

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

முன்னுரை

சீமோன் நாணலைப்போன்று காற்றடிக்கின்ற பக்கம் சாயும் மனநிலையுடன் காணப்படுகின்றார். அவரை இயேசு சந்தித்து இதுமுதல் நீ மனிதரைப்பிடிப்பவன் ஆவாய் என்றதும் தன் படகினையும், பெருமளவில் பிடிப்பட்ட மீன்களையும் தன் தொழில், குடும்பம் என அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவரின் பின் சென்றார். இன்றைய நற்செய்தியில் இயேசு சீமோன் என்ற பெயரை மாற்றி பேதுரு என்ற பெயரை கொடுத்து அவரை பாறை என்ற பொருள்தரும் இராயப்பராக மாற்றி தன் திருச்சபையை அவர்மேல் நிறுவி, விண்ணரசின் திறவு கோள்களை அவரிடம் ஒப்படைத்து, அவரை முதல் ஆயராக, திருத்தந்தையாக உயர்த்தி அவரிடம் சகல அதிகாரங்களையும் தருகிறார். அவர் தன்னை இறைப்பணிக்காக கையளித்து இறைவார்த்தையை மக்களுக்கு போதித்தது, திருமடல்கள் எழுதி, இயேசுவுக்காக சிலுவை மரணத்தை

அதுவும் தன்னை சிலுவையில் தலைகீழாக அறையும்படி வற்புறுத்தி தன்னை தியாகப்பலியாக்கினார். நாமும் இத்திருப்பலியில் தூய பேதுருவின் மனநிலையை ஏற்று இயேசுவின் சாட்சிகளாக வாழ வரம் வேண்டி பக்தியுடன் செபித்து பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புனித பேதுருவின் வழிநடக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் நல்ல மேய்ப்பர்களாக தன்னலத்துடன், வாழாமல் தூய உள்ளத்துடன் இறைவனுக்கு பணி செய்கிறோம் என்ற உணர்வுடன் தம் கடமைகளை செய்ய உடல் உள்ள நலத்தினைத் தந்து அவர்களை இறைவார்த்தையின் வழிநடத்திட புனித பேதுருவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இறை ஊழியத்திற்காக தங்களை அர்ப்பணித்துள்ள கன்னியர்கள், துறவற சபையினர், இறைப்பணியாளர்கள், பக்த சபையினர், பங்கு பேரவையினர், அன்பிய பொறுப்பாளர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை உணர்ந்து தாழ்ச்சி உள்ளத்தோடு, அனைவரையும் சமமாக மதித்து இறைச்சமூகத்தை கட்டியெழுப்பும் நற்பணியாளர்களாக விளங்க புனித பேதுருவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. திருமுழுக்குப் பெற்ற அனைவரும் தாம் பெற்றுக்கொண்ட கொடைகளை பலுகி பெருக செய்து பரிசுத்த உள்ளத்தோடு இறைப்பணியாளர்கள் சொற்படி நடந்து தங்களாலான நற்பணிகளையும், உதவிகளையும், நேரங்களை திருச்சபையின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வாழும் நல்லுள்ளம் வேண்டி புனித பேதுருவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. விண்ணரசின் திறவுகோல்களை பெற்றுள்ள பேதுருவின் தூய பீடத்தின் திருநாளான தவக்காலத்தில் கொண்டாடப்படுகின்ற இந்நன்நாளில் நாம் நம் பாவ வாழ்விலிருந்து விடுபடவும், மரித்த நம் உற்றார், உறவினர், நண்பர்களின் பாவங்கள் மன்னிக்கப்படவும், அனைவரும் விண்ணகத்தில் புனிதர்களோடு இணைந்து இறைவனை முகமுகமாக தரிசிக்கும் பாக்கியம் பெற புனித பேதுருவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 25.02.2016 தூய அலோசியஸ் வெர்சீலியா மற்றும் தூய கலிஸ்துஸ் கரவாரியோ திருநாள் திருப்பலி

திரு.ஜான் அலெக்ஸ்

முன்னுரை

அன்புக்குரியவர்களே, புனிதத்தை நோக்கிய பயணத்தில் சலேசிய ஆயர் வெர்சீலியா மற்றும் தந்தை கரவாரியோ, சீன மண்ணில் பூத்த தியாக மலர்கள் ஆவர். தொன் போஸ்கோவின் சீன மறைப்பணி கனவை நினைவாக்கியவர்கள். 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, பணி வெர்சீலியா தலைமையில் சென்றது. சலேசியர்களின் சிறப்பான பணிக்கு சாட்சியாக அங்கு ஒரு மறைமாவட்டம் உயிர்பெற்றது. அதன் முதல் ஆயராக வெர்சீலியா நியமிக்கப்பட்டார். 1922ல் அவரை சந்தித்த சில இளம் துறவற சகோதரர்களில் ஒருவர் சீன மறைப்பணிக்காக தாமும் ஆயருடன் செல்ல விருப்பம் தெரிவித்து 1924ல் மறைப்பணியாளராக சீனா சென்றார். அந்த அருட்சகோதரர் கரவாரியோ ஆவார். 1929ல் ஆயர் வெர்சீலியாவின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சீனா, திருச்சபைக்கு எதிராக கடுமையாக மாறிக்கொண்டிருந்த காலம் அது. குறிப்பாக தந்தை கரவாரியோ பணியாற்றும் லின்ச்சோ மிகவும் கலவரத்திற்குட்பட்ட பகுதி. 1930 பிப்ரவரி 24ல் தந்தை கரவாரியோ, 2 இளம் வேதியர்கள், 3 இளம் பெண்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் ஆயர் வெர்சீலியா, லின்ச்சோ சென்றார். அப்பயணத்தின்போது வழிக்கொள்ளையர் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டது. அக்கொள்ளையர்களின் தீயக்கண்கள் குழுவில் இருந்த இளம் பெண்கள் மீது விழ, அவர்களையும் மற்றவர்களையும் காப்பாற்ற துணிச்சலாக நின்ற ஆயரும், தந்தை கரவாரியோவும் சுட்டுக்கொள்ளப்பட்டனர். 2000ல் திருச்சபை இவர்களை புனிதநிலைக்கு உயர்த்தியது. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பை நாம் முழுவதுமாக உணர்ந்து வாழ வேண்டி இத்திருப்பலியின் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை எமது வாழ்வில் உணர்ந்து, எல்லோரையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் அடிப்படையாக அமையும் சலேசிய ஆன்மீகத்தை எமக்கு வாழ்வாக்கிய புனிதர்கள் வெர்சீலியா மற்றும் கராவாரியோ முன்மாதிரியில் பல இளையோரை இறை அழைத்தலில் நிலைபெற செய்ய வேண்டிய அருளை தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்

2. தீயை மூட்டவே வந்தேன். அது இப்போதே பற்றி எரிய விரும்புகிறேன் என்றவரே, மனித நேயத் தீ எம்மில் பற்றி எரியவும் சமத்துவம் சகோதரத்துவம் மலர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. மறைப்பணிக்காக தங்களை அர்ப்பணித்துள்ள எம் சலேசிய துறவிகளை திடப்படுத்தி ஆசீர்வதித்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை திறம்பட வழிநடத்த தேவையான அருளை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 28.02.2016 தவக்கால மூன்றாம் ஞாயிறு திருப்பலி

திரு. D.V.ராஜா

**முன்னுரை**

இறைச்சமூகமே, இன்று நாம் தவக்கால மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையை தியானிக்கின்றோம். தவம் என்பது நம் மனதினை ஒருமுகப்படுத்தி இறைவனை தியானிப்பது, தியானத்தின் வழியாய் ஞானம் பிறக்கும். அதற்கு தயார் செய்யும் அவகாசமாக தவக்காலம் அமைந்துள்ளது. இதற்கு நாம் மனமாற வேண்டும் அவ்வப்போது ஆலய வழிபாட்டில் அநேக காலம் கலந்துக்கொண்டாலும் இறைவனுக்கு ஏற்புடையவராய் உள்ளோமா? இன்று மரித்தால் நித்திய வான்வீட்டில் நுழைய தகுதி உள்ளதா என்று சிந்திப்போம். இன்றைய வாசகங்கள் நாம் பாவ வழியை விடுத்து மனம் மாறி இறைவனை தேடும் மனமாற்றத்தை அழுத்தமாய் குறிப்பிடுகின்றன. எனவே சுயநலம், பேராசை, கர்வம், வீண்பெருமை, வஞ்சகம், பொறாமை போன்ற தீய குணங்களை விடுத்து, ஆண்டவர் காட்டிய அன்பு நெறியில் தாழ்ச்சியோடு, விட்டுக்கொடுத்து உதவி செய்யும் நல்லுள்ளம் கொண்டு இறைவனுக்கு ஏற்புடையவராய் வாழ்ந்து நமது வாழ்வை அடுத்த தலைமுறைக்கு உதாரணமாய் தந்து வாழ தகுதியை ஏற்படுத்திக்கொள்ள ஞானம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. முதலும் முடிவுமான இறைவா, ஆன்மீக தலைவர்கள் ஆன்மிக தாகங்கொண்டு இறைவார்த்தைகளை பயனுள்ள முறையில் அனைவருக்கும் சென்று சேர்க்கவும் இறைமக்களுக்கு இறைவார்த்தையின் நம்பிக்கை வளர்க்கவும் உலகின் கடை எல்லைவரையும் நற்செய்தி விதைக்கப்படும் கருவிகளாய் பயன்படுத்தவும் இடறல் இன்னல்களிலிருந்து பாதுகாக்கவும் உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்தையும் படைத்த இறைவா, ஆட்சியாளர்கள் மக்களை பாரபட்சமின்றி நடத்தவும், மக்களின் குறைதீர்க்கும் நல்ல உள்ளத்தினை தந்து, பயன்தரும் திட்டங்கள் கொண்டு மக்களின் வறுமை போக்கி லஞ்சம் வேலையின்மை அகலவும் நாட்டின் வளமை இயற்கை வளம், பொது உடைமைகளை அக்கறையோடு பாதுகாக்கவும் உதவி செய்ய உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வின் முழுமையே இறைவா, பங்கு மக்கள் அனைவரும் தங்கள் பங்கு வளர்ச்சியில் முன்னேற்றத்தில் ஈடுபடுத்திக்கொண்டு கட்சி மனப்பான்மையின்றி ஒத்தக் கருத்தோடு பங்கு தந்தையோடு இணைந்து செயல்படவும் இவர்கள் குடும்பங்களை பஞ்சம், கடன், பற்றாக்குறை, நோய் போன்ற இடர்பாடுகள் ஏற்படாது அபரிமிதமாய் அசீர்வதிக்கவும் உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வின் ஊற்றே இறைவா, இயற்கை சீற்றத்தால் நிற்கதியாய் நின்ற மக்களை அநேக நல்லுள்ளங்கள் தொண்டு நிறுவனங்கள், வசதிபடைத்தவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், காவலர்கள், மீனவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்த அனைவரையும் நீர் ஆசீர்வதித்து இவர்கள் குடும்பங்களும் பிள்ளைகளும் நலமோடு வாழ உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 : விசுவாசத்தில் வளர...

**மீண்டும் தவக்காலம் : என்ன செய்யப் போகிறோம்?**

திரு. விக்டர்

"இறை இரக்கத்தின் ஆண்டு 2016" துவங்கி நாட்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. வழிபாட்டின் பொதுக்காலமும் துவங்கிவிட்டது. இன்னும் சிறிது நாட்களில் "தவக்காலமும்" துவங்கிவிடும். தவக்காலத்தில் மக்கள் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு காட்டுவதை நாம் வருடந்தோறும் பார்த்து வருகிறோம். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை, சிறப்பு வழிபாடுகள், தியானங்கள், பாவ மன்னிப்பு வழிபாடுகள் என்று ஏராளமாக செய்து வருகிறோம். நமது "தீபகம்" கூட ஒலி ஒளி காட்சி சிலுவைப் பாதையை பல்வேறு பங்குகளில் நடத்தி வருகிறது. ஒரு சிலர் தவக்காலம் முழுவதும் அசைவ உணவு உண்ணாமல், சைவ உணவை உண்ணும் பழக்கத்தை கடைப்பிடித்து வருகின்றனர். பெண்கள் பெரும்பாலும் இந்நாட்களில் தலையில் "பூ" வைத்துக் கொள்வதில்லை, ஆண்கள் பலரும் இந்நாட்களில் மது அருந்துவதை தவிர்த்து வாழ்கின்றனர். (தவக்காலம் முடிந்தவுடன் மீண்டும் மது அருந்துவது வேறு விஷயம்). பல்வேறு ஆலங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்வது இப்பொழுது புதிதாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. (இதில் ஆலயத்துக்கு ஆலயம் யார் அதிகம் பேருந்துகளை ஏற்பாடு செய்வது என்ற போட்டி தனிக்கதை) ஞாயிறு மட்டும் திருப்பலிக்கு வந்தவர்களில் பலர் தினந்தோறும் திருப்பலிக்கு சென்று வருவதும் இக்காலத்தில்தான்.

இத்தவக்காலங்களில் மக்கள் எடுக்கும் தவமுயற்சிகளும் ஆலய பங்குத் தந்தையர், ஏற்பாடு செய்யும் ஆன்மீக நிகழ்ச்சிகளும் சிறப்பானவையே. இவைகளைக் குறைக்கூறுவது நமது கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் இவைகளால் நமது மனம் எவ்வளவாய் மாறியுள்ளது? தமது இரக்கத்தினால் நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்கும்படி வந்த இறைமகன் இயேசுவின் "மீட்பை" நாம் பெற்றுக்கொண்டுள்ளோமா? (1தீத்து 3:5) அப்படி மீட்பை அடைந்திருப்பது உண்மையென்றால் நமது வாழ்வில் அதற்கான அடையாளங்கள் என்ன? இதுதான் இவ்வாண்டு நம்முன் நிற்கும் கேள்வி.

**மீட்பு என்றால் என்ன?**

இன்று நம் கத்தோலிக்கரைப் பார்த்து பிற சபையினர் ஏளனமாக கேட்கும் கேள்வி, "நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா?" "நீங்கள் மீட்கப்பட்டுவிட்டீர்களா?" என்பதுதான். இப்படி கேள்வி கேட்கும் அநேகருக்கு இதன் உண்மை விளக்கம் தெரியாது என்பதுதான் விசித்திரம்.

**மீட்பு என்பது மூன்று அனுபவங்களைக் கொண்டது.**

**முதல் அனுபவம்:** இந்த உலகில் வாழும் நாம் யாவரும் கடவுளின் பார்வையில் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். திருத்தூதர் பவுல் இயேசுவினால் நேரடியாக தெரிந்துக்கொள்ளப்பட்டவர். அநேக திருப்பயணங்கள் மேற்கொண்டு "ஆசியா" எங்கும் பல திருச்சபைகளை உருவாக்கியவர். அநேக அதிசயங்கள் செய்தவர், மரித்தவரையும் உயிரோடு எழுப்பினவர். திருவிவிலியத்தில் அதிகமான (13) புத்தகங்களை எழுதியவர் இவர்தான். இறை இயேசுவுக்காக இரத்த சாட்சியாக தன் இன்னுயிரை ஈந்தவர். அவர் கூறுகிறார், "பாவிகளில் முதன்மையான பாவி நான்தான்" (1திமோ 1:15) என்று. அப்படியானால் நாம் எம்மாத்திரம். எனவே நாம் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**இரண்டாவது அனுபவம்:** பாவிகளாகிய நம்முடைய பாவங்களை சுமந்து நம்மை மன்னித்து அவர் நம்மை மீட்கிறார் என்பதை நம்ப வேண்டும். (எசா 53: 5), (1யோவா 1:7) இது இரண்டாவது அனுபவம்.

**மூன்றாவது அனுபவம்:** இந்த இயேசு கிறிஸ்துவிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டு அவர் நம்மை மன்னித்துவிட்டார் என்கிற நிச்சயத்தை உள்ளத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் (1யோவா 1:9)

இந்த மூன்று அனுபவங்களும் இணைந்ததுதான் "மீட்பு" அல்லது "இரட்சிப்பு" அல்லது யோவா 3:3ல் இயேசு கூறும் "மறுபடி பிறத்தல்" ஆகும். இதைப்பெற்றால்தான் பரலோகத்தைக் காணமுடியும். இந்த "மீட்பை" நாம் பெற்றுக் கொண்டுள்ளோமா? இல்லையா? என்பதை எப்படி அறிந்து கொள்வது? இதற்கு **ஐந்து அடையாளங்கள்** உள்ளன.

**முதல் அடையாளம்:** இந்த மீட்பு ஒருவருக்குத் தருவது "மிகுந்த மகிழ்ச்சி" ஆங்கிலத்தில் "Great Joy" என்று சொல்லுவார்கள். (பிலி 4:4) ஒருவரது வாழ்வில் வருத்தங்கள் இருக்கலாம், கவலை இருக்கலாம், கண்ணீர், வேதனை இருக்கலாம். ஏமாற்றம்-தோல்வி இருக்கலாம். வியாதிகள் இருக்கலாம், துன்பம் இருக்கலாம், கடன் தொல்லைகள் இருக்கலாம், இவை அனைத்தின் மத்தியிலும் ஒருவர் "மிகுந்த மகிழ்ச்சியோடு" இருக்கிறார் என்றால் அவர்தான் "மீட்பை" பெற்றுள்ளார் என்று சொல்லலாம். இந்த "மிகுந்த மகிழ்ச்சி" நமது உள்ளத்திலும், முகத்திலும் இருக்கிறதா? கண்ணாடியில் நமது முகத்தை ஒருமுறை பார்த்துக் கொள்ளுவோம்.

**இரண்டாவது அடையாளம்:** இறைமகன் இயேசு விரும்புகிற செயல்களை மட்டுமே செய்வோம். அதை எப்படி அறிந்துக் கொள்வது? அதற்கு ஒரே வழி இறைவார்த்தையைப் படிப்பதுதான். இறைவார்த்தையைப் புறக்கணிக்கிறவன் வாழ்வடைய மாட்டான் என்றும் (நீதி 13:13) அப்படிப்பட்டவனுடைய செபத்தை வெறுக்கிறேன் (நீதி 28:9) என்றும் ஆண்டவர் கூறியுள்ளார். ஆண்டவரை அறிகிற அறிவுதான் நீடித்த வாழ்வு அல்லது நித்திய வாழ்வு (யோவா 17:3) இந்த அறிவுதான்

அவர் விரும்புகிற செயல்களைச் செய்ய நம்மைத் தூண்டும். எனவே தினந்தோறும் இறை வார்த்தைகளைப்படித்து அவரது விருப்பத்தை அறிந்து செயல்படுகிற மக்களாய் மாறுவோம்.

**மூன்றாவது அடையாளம்:** இது இரண்டாவது அடையாளத்திற்கு நேர் எதிரானது. ஆண்டவர் விரும்பாததைச் செய்யாமல் இருப்பது. கடவுளின் "வார்த்தை" என்கிற வித்து நமக்குள் இருப்பதால் அது நம்மை எச்சரித்து கடவுளுக்குப் பிரியமில்லாததை செய்யவிடாமல் நம்மை தடுத்துவிடுகிறது.

**நான்காவது அடையாளம்:** மீட்கப்பட்டவர் தம் அயலாரோடும் மற்றவரோடும் நல்ல சகோதர உறவில் நிலைத்திருப்பர். உன்னை அன்பு செய்வதுபோல உன் அயலாரையும் அன்பு செய் (மத் 22: 39) என்று இறைமகன் இயேசு நமக்குக் கட்டளையிட்டுள்ளார். கண்ணில் காண்கின்ற சகோதரனை அன்பு செய்யாமல் கண்ணால் காணாத கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லுகிறவன் பொய் சொல்லுகிறான் (1யோவா 4:20) என்று தூய யோவான் கூறியுள்ளார். நமது உறவுகளை சோதித்து அறிவோம். உங்கள் விண்ணகத் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபொல் நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள் (லூக் 6:36).

**ஐந்தாவது அடையாளம்:** மீட்கப்பட்டவன் ஆண்டவருக்கென்று பணி செய்வான், இறை ஊழியம் செய்வான். இது இறைமகனின் கட்டளை. (மத். 28:20) இறை பணியை மூன்று நிலைகளில் செய்யலாம்.

**முதல் நிலை:** நேரடியாக களத்தில் இறங்கி நற்செய்தி அறிவிப்புப் பணி செய்வது. இன்று பலரும் செய்து வருகின்றனர்.

**இரண்டாம் நிலை:** மேற்கூறியபடி களத்தில் இறங்கி நேரடியாக பணி செய்ய முடியாதவர்கள் தங்களது உடைமைகளாலும் உடலுழைப்பாலும் இறைப்பணி செய்பவர்களுக்கு உதவிகள் செய்யலாம்.

**மூன்றாம் நிலை:** இதையும் செய்ய முடியாதவர்கள் நற்செய்தி அறிவிப்பு பணி செய்யும் யாவருக்கும் தங்களது இல்லத்தில் முழந்தாள் தாழ்த்தி செபிக்கலாம். இதை முடியாது என்று யாரும் சொல்ல முடியாது. கட்டாயம் செய்தே ஆகவேண்டும்.

எனவே அன்பர்களே, இந்த 2016ம் ஆண்டு "இறை இரக்கத்தினால்" நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இறைமகன் இயேசு கொண்டு வந்த "மீட்பை" புதுப்பித்துக் கொள்வோம். மீட்பின் ஐந்து அடையாளங்களும் நம்மில் இருக்கும்படி பார்த்துக் கொள்வோம். அவை இந்த தவநாட்களில் மட்டுமில்லாது ஆண்டு முழுவதும் இருக்கும்படி அமைத்துக் கொள்வோம்.

இறைமகன் இயேசுவின் இறை இரக்கம் என்றும் நம்மோடு இருப்பதாக. ஆமென்.

## தூய லூர்தன்னை தரும் செய்திகள்

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

"என் ஆன்மா ஆண்டவரை ஏத்தி போற்றுகிறது,
என் மீட்பராம் கடவுளை நினைத்து என்மனம் மகிழ்கின்றது. (லூக்1:46-47)

தூய கன்னிமரியாள் இறைமகன் இயேசுவின் தாய். இவ்வுலகில் வாழ்வோரின் அனைவரின் தாயும் ஆவாள். இயேசுவின் தாயாகவும், பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவருமான அன்னைமரியாவின் புனிதமும், விசுவாசமும், பணிவும் செபவாழ்க்கையும் மரியாவின் வாழ்க்கைப் பயணத்தில் அவளுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக திகழ்கின்றன. அதுமட்டுமல்லாமல் "இதோ ஆண்டவரின் அடிமை, உம்முடைய வார்த்தையின் படியே ஆகட்டும்" என்ற சொற்களின் வழியாக தந்தையாம் இறைவனின் சித்தத்தை இறுதிவரை இயேசுவின் சிலுவை மரணம் வரை மீட்பிற்காக துணைபுரிந்தாள். இதற்கு இறைமகன் இயேசுவும் "இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுபவர்களே என் தாயும் சகோதரர்களும்" என்று கூறி அன்னை மரியாளை உயர்த்தியுள்ளது தெளிவாகிறது. இத்தகைய கிருபையும் வல்லமையும் நிறைந்த அன்னை மரியாள் உலகின் பல இடங்களில் பலருக்குக் காட்சிதந்து, எண்ணற்ற புதுமைகள் வழியாக இயேசுவின் மகத்துவத்தை வல்லமையையும் உலக மக்களுக்கு வெளிப்படுத்துகிறாள்.

லூர்தன்னை 1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாளிலிருந்து ஜீலை 11ம் நாள்வரை பிரான்ஸ் நாட்டிலுள்ள லூர்து என்னும் இடத்தில் பெர்னதெத் என்னும் 14 வயது சிறுமிக்கு தேவதாய் 18முறை காட்சி கொடுத்தாள். 18 தடவையும் அன்னையின் கையில் செபமாலை இருந்தது. பாவிகளுக்காக செபிக்கும்படி தவம் செய்யும்படி தரையை முத்தமிடும்படி அற்புத சுனையிலிருந்து நீர் அருந்தும்படி தேவதாய் கேட்டுக்கொண்டாள். அன்னையின் பெயரை தெரிவிக்கும்படி பெர்னதெத் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டதால் அன்னை மரியாள் புன்சிரிப்புடன் கரங்களை குவித்து "நான் அமல உற்பவம்" என்று சொல்லி மறைந்தாள்.

லூர்தன்னையின் விருப்பமும் அவர் நமக்கு தரும் பாடமும் பெர்னதெத் அன்னையைப் பார்த்து பயந்தபோது, அன்னை புன்முறுவலோடு பெர்னதெத்திடம் பயப்படவேண்டாம் என்று கூறினாள். நாமும் பிறரிடம் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்று அன்னை விரும்புகிறாள். பெர்னதெத் செபமாலை எடுத்து சிலுவை அடையாளம் போட முடியாமல் தவித்தபோது அன்னை அவளுக்கு உதவியாக தானே முதலில் சிலுவை அடையாளத்தை வரைந்தாள். இச்செயல் சிலுவை அடையாளம் எல்லா பயத்தையும் ஓட்டிவிடும் என்பதை உணர்த்தினாள். லூர்து அன்னை பெர்னதெத்துக்கு மட்டுமல்ல யாருக்கெல்லாம் காட்சித் தருகிறார்களோ அப்போதெல்லாம் தன்னுடைய கையில் செபமாலை

வைத்திருப்பதை பார்த்துள்ளனர். லூர்து அன்னை நாமும் செபமாலையை தினமும் செபிக்கும்படி கூறுவது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, பாவிகள் மனந்திரும்ப, தீமைகள் விலக, நோய்கள் தீர என்றென்றும் செபமாலை செபிக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறாள். பக்தியுடன் சொல்லும் ஒவ்வொரு செபமாலையும் மனிதர்களை குறிப்பாக பாவிகளை நரகத்திலிருந்து பாதுகாக்கும் ஆயுதமாக இருக்கும் என்றும் செபமாலை பிசாசை அடித்து நொறுக்கும் சாட்டை என்றும் தூய லூயி தி மான்போர்ட் வழியாக அறிவித்துள்ளார்.

திருச்சபையில் இன்றுவரை தோன்றிய புனிதர்கள், புனிதைகள் அனைவருமே தங்களுடைய புனிதத்தன்மையை அடைவதற்கு செபமாலை செபிப்பது பெரிய உதவியாக இருந்துள்ளது. உதாரணமாக அருட்தந்தை பியோ ஒருநாளைக்கு 60க்கும் மேற்பட்ட செபமாலை செபித்ததாக கூறியுள்ளார். அவ்வாறே தூய தொன் போஸ்கோ, தூய அந்தோணியார், தூய ஐந்தாம் பத்திநாதர், தூய லூயிஸ் மோன்பர்ட் போன்றவர்கள் லூர்தன்னையின் விருப்பப்படி செபமாலை செபித்தே தங்களுக்கு ஏற்படும் சோதனையை வென்றனர். எனவே லூர்தன்னை நமக்கு முக்கியமாக சொல்லுவதும், கேட்பதும், பாவிகள் மனந்திரும்ப செபமாலை சொல்லுங்கள். செபமாலை சொல்லும்போது இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை வரலாறு, இறப்பு, உயிர்ப்பு போன்றவைகளை தியானிக்க உதவியாக இருக்கும். மேலும் கானாவூர் திருமணத்தின்போது ஏற்பட்ட பற்றாக்குறையை தீர்க்க தன்னுடைய மகனிடம் பரிந்து பேசினது நாம் அறிந்தது. இப்பரிந்துரையின் வழியாக அன்னை நம்மிடம் கூறுவது "அவர் சொல்வதை செய்யுங்கள்" (யோவா 2:2).

**முடிவுரை**

தேவ அன்னையை நேசிக்கும் நாம் வல்லமையுள்ள செபமாலையை அவளின் விருப்பப்படி தினமும் சொல்வோம். குறைந்த பட்சம் மூன்று முறையாவது உறங்கச் செல்லும்போது அருள்நிறைந்த மரியே வாழ்க என்ற செபத்தை சொல்வோம். நம்முடைய பாவங்களுக்காகவும், பிறரின் மனந்திரும்புதலுக்காகவும் செபமாலை சொல்வோம். தவ முயற்சிகள் செய்வோம்.

மாசில்லா மனமும் இயேசுவின் உள்ளமும்
மாந்தரின் தவறால் நோவுறக் கண்டோம்
செபம் செய்வோம் தினம் செபமாலை சொல்வோம்
பாவத்திற்காக பரிகாரம் செய்வோம். ஆமென்.

## சிலுவைப் பாதை: மனித நேயப் பாதை

**முன்னுரை**

அன்புச் சகோதரமே
தியாகம் என்பது திணிக்கப்படுவதன்று-அது
உள்ளத்திலே ஊறி வருவது
தியாகம் என்பது தன் வளர்ச்சிக்கன்று-அது
அடுத்தவன் வாழ தன்னை அழிப்பது
தியாகம் என்பது சுயநலவாதியின் சொத்தன்று-அது
பொதுநலவாதியின் பூரிப்பு
தியாகம் என்பது அழிந்துபோகும் பொருளன்று-அது
என்றும் நிலைத்திருக்கும் இறைவனின் கொடை.

ஆம். தியாகம் என்பது மகத்தான ஒன்று. அத்தகைய ஈடு இணையற்ற சொல்லின் இலக்கணமாய் வாழ்ந்தவர் இறைமகன் இயேசு. தன் மக்களை மீட்கவேண்டுமென உள்ளத்திலே உறுதிகொண்டு, பிறர் நலனில் அக்கறைக்கொண்டு, அதனைப் போதனையாக்கி, வாழ்வில் சாதனையும் படைத்ததற்குக் கிடைத்திட்ட பரிசு சிலுவை மரணம். சிலுவையைச் சுமந்து செல்லும் பாதை கரடுமுரடானதுதான். ஆனால், "வாழ்வதற்காகப் போராடுவோர்க்கு" கரடுமுரடான பாதையும் சமதள பாதையாகும். ஏனெனில் சவால்களை எதிர்க்கொள்ளும் மனநிலை வெற்றிக்கான வீரிய விதையாம். ஆம், இயேசு பாவத்தின், அலகையின் சவால்களை எதிர்கொண்டார். விளைவு விடுதலை வாழ்வு. அவ்விடுதலை வாழ்வினை நாமும் பெற இறைஇயேசுவோடு சேர்ந்து சவால்களைச் சந்திக்கும் சத்தியத்தின் பாதையில் பயணிப்போம்.

**பாடல் :** விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்...

### முதல் நிலை: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**முதல்வர்:** திவ்ய இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**எல்லோரும்:** அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

பிறரைக் குற்றவாளிகள் என தீர்ப்பிடாதீர்கள், என்றவரையே அன்று பிலாத்து குற்றவாளி என தீர்ப்பிட்டான். இதற்குக் காரணம், இறைமகன் இயேசுவை ஏற்காத பரிசேயரும் சதுசேயருமே. இன்று நாம் வாழும் சமுதாயத்தில் மனித

நேயங்கள் எல்லாம் காயங்களாகிப் போனதால் நேயங்கள் பிறப்பதில்லை - இங்கே காயங்கள் ஆறுவதில்லை. அதனால்தான், தற்கால மனிதன் கற்காலத்திற்கு மாறிக்கொண்டிருக்கிறான். சட்டங்களும் திட்டங்களும் இங்கே சதிராட்டம் போடுவதால்தான் மனித நேயங்கள் வாலில்லாத பட்டங்களாய் வானில் பறக்கின்றன, கேள்விக் குறியாகின்றன. ஆம், மனித நேயம் ஒதுக்கப்பட்டதால், மறுக்கப்பட்டதால் அநீத ஆட்சிகள் தலைத்தூக்கிவிட்டன, அநியாய தீர்ப்புகள் நடைமுறையாகி விட்டன. இந்நிலை என்று மாறும்? அதனை மாற்றிடும் பணியில் உனது பங்கு என்ன? பிறரைத் தீர்ப்பிடாமலும், நாம் தீர்ப்பிடப்பட்டால் விசுவாசத்தின் மேன்மையில் நிலைத்து வாழ்ந்து மனிதநேயம் மலர்ந்திடவும் வழி காணுவோம்.

**செபம்:** நீதியின் நாயகனே, அநீத ஆட்சி அடைப்புகளும் அநியாய தீர்ப்புகளும் மண்ணில் மறைந்து நீதி எனும் ஒளியை நாங்கள் பெற்றிட வரம்தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** : இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ...

### இரண்டாம் நிலை: இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

சிலுவை, இது அவமானத்தின் சின்னம். கலகக்காரர், திருடர், கொலைக்காரர், தீவிரவாதி இவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைதான் சிலுவை மரணம்.பிறந்தது முதல் 33 ஆண்டு கால வாழ்வில், என்றுமே தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி எல்லோருக்கும் நலமளித்த இயேசுவுக்கா இக்கொடுமை? அவர் செய்த குற்றம்தான் என்ன? செய்யாத குற்றத்திற்காக அல்லவா அவர் சிலுவை சுமந்தார்? ஆனால் நாம் இன்று, மனிதர்க்கும் இயற்கைக்கும் தீங்கிழைக்கின்றோம். பறவைகளையும், விலங்கிணங்களையும் கொன்று குவிக்கின்றோம், காற்றை, நீரை, நிலத்தைக் கெடுக்கின்றோம். மனித உறவுகளில் பகையென்னும் நஞ்சைக் கலக்கின்றோம். நாம் செய்யும் இதுபோன்ற தவறுகளுக்கு நமக்கென்ன தண்டனைக் கொடுப்பது? ஆயிரம் குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஆனால் ஒரு நிரபராதி கூட தண்டனைப் பெறக்கூடாது என நினைக்கும் நாம், பாவமே அறியாத ஒருவரை, நாம் செய்யும் பாவங்களால் மீண்டும் மீண்டும் சிலுவை சுமக்கச் செய்யும் நிலைதானே இன்றும் நீடிக்கிறது. நாம் தாழ்நிலையிலிருந்து மீண்டு வருவது எப்போது?

**செபம்:** சிலுவை நாயகனே எம் இறைவா, பிறர்மேல் சிலுவையைச் சுமத்துகிறவர்களாக இல்லாமல், பிறரின் சிலுவைகளைச் சுமக்கும் உள்ள உறுதியை நாங்கள் பெற்றிட துணை புரியும்-ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** : கருணை தெய்வமே கண்பாரும்...

### மூன்றாம் நிலை: இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

அன்று பாலைவனத்திலே பசியால் வாடிய இயேசுவை, அலகை சோதித்தபோது, "மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை" என்றார். அப்படியானால் உணவே தேவையில்லை என்கிறாரா? என்னும் சந்தேகம் நம்மில் எழலாம். ஆனால் இறை இயேசுவின் கருத்து அதுவன்று. மாறாக, இன்றிருக்கும் நீ நாளை இல்லை, இது ஒரு கனவோ அல்லது நினைவோ, இது ஒரு நிஜமோ அல்லது நிழலோ தெரியாது. இப்படிப்பட்ட வாழ்க்கையில் வாழ்வதற்காக உண்ணாமல், உண்பதற்காகவே வாழ்கின்ற நம் செயல்கள், அடுத்தவரை அடிமைப்படுத்தி நாம் காணும் சுகங்கள், இறை இயேசுவை மண்ணில் வீழ்த்துகின்றன. இவற்றினின்று விடுபட்டு, வீழ்ந்து கிடக்கும் இயேசுவை தூக்கிவிடும் காலம் எப்போது மலரும்?

**செபம்:** மண்ணை முத்தமிட்ட இயேசுவே, நாங்கள் உலக ஆசையை விடுவித்து, உத்தம மக்களாய் வாழ வரமருளும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ...**

**நான்காம் நிலை: தாய் மகனைச் சந்திக்கிறார்**

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

பன்னிரண்டு ஆண்டுகளாய் பாடுபட்டு வளர்த்த மகன் காணவில்லை, பதறினாள் தாய். மூன்று ஆண்டுகள் சமுதாயப்பணி, இறைத்தந்தையின் பணியைச் செய்தார். பூரித்துப்போனாள் தாய். அதற்குப் பரிசாய். அவருக்குக் கிடைத்தது பாரச்சிலுவை. அன்னைமரி துடிதுடித்துப்போனாள். தாய்ப்பாசம் இங்கு தரணிக்கு உணர்த்தப்படுகிறது. இன்று தாய்மார்கள் பலர் கோவில்களிலும், வீடுகளிலும், லேடிஸ் கிளப்புகளிலும், வீதிகளிலும், விமர்சனம் கிடைக்கும் இடங்களிலும் பிரசன்னமாகத் தவறுவதில்லை. ஆனால், தான் பெற்ற பிள்ளைகளுக்கு அன்பைக் காட்ட அவகாசம் இல்லை என்கிறார்கள். பிள்ளைகளில் எத்தனைக் குழந்தைகள் அனாதைகள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடுக்கிக்கொண்டே போகலாம். "அன்பென்னும் உளி கற்பாறைகளையும் சிற்பங்களாக்கும்". அன்பு ஆக்கச் சக்திகளின் அடித்தளம் என்பதை நம் அன்னையர்கள் அறிவது எப்போது?

**செபம்:** மரியின் மகனே, தாய்மார்கள் தம் புகழ், பெருமை தேடாது பெற்ற பிள்ளைகளின் நலனுக்காய் நாளும் வாழ்ந்திட வரமருளும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: எதை நான் தருவேன் இறைவா...**

**ஐந்தாம் நிலை: சீமோன் இயேசுக்கு உதவுகிறார்**

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

மலைக்கும் கடலுக்கும் மாநதி ஓர்பாலம், அலைக்கழிக்கும் உலகுக்கு ஆழ்கடல் ஓர்பாலம், கிழக்கு மேற்குக்கு கதிரவன் ஓர்பாலம், வளைந்து வரவேற்கும் வானவில்லும் ஓர்பாலம், இதற்கெல்லாம் மேலாய், இறைவனுக்கும் மனிதனுக்கும், இறை இயேசுவே இணையற்ற பாலம், மனித உறவுகளுக்கு இறைமகனே மகத்தான பாலம். பாலமாய் விளங்கின கால்கள், அடைக்கலமென அண்டியவருக்கெல்லாம் உதவின கரங்கள், சக்தியிழந்து விட்டன. நடை தளர்ந்து பிறரின் உதவியை நாடுகிறார் இயேசு. சீமோன் அப்பேற்றினைப் பெற்றார். ஆனால் இது உண்மையன்று. இயேசு கல்வாரி மலையை அடையும் முன்பே இறந்து விடுவாரோ என எண்ணிய கயவர்கள், சீமோனைக் கட்டாயப்படுத்தி அழைத்தனர் சிலுவை சுமக்க. இதுதான் நடந்தது. முதலில் மனதின்றி ஏற்ற சீமோன், பின்னர் ஆனந்தம் அடைந்தான். இயேசுவுக்கு உதவுவதில் இன்பம் கண்ட சீமோனைப்போல், ஏழை, அனாதை, கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர், மனநிலை பாதிக்கப்பட்டோர் இவர்களில் இயேசுவைக் கண்டு அவர்களுக்கு உதவிட முன்வருவோமா? கரைகின்றேன் நான் கரைகின்றேன், கருக்கல் வரும் வரை கரைகின்றேன், காரிருள் போக்கவே கரைகின்றேன், என பகரும் மெழுகு வர்த்தியைப்போல் நம்மையே பிறரன்பு சேவைக்காய் அர்ப்பணிப்போம்.

**செபம்:** ஆண்டவரே துயரத்தில் வாழ்வோரின் உள்ளங்களை நாங்கள் தேற்ற வரமருளும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: கல்மனம் கறைய கண்களும் பனிக்க...**

**ஆறாம் நிலை: இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்காள் துடைக்கிறாள்**

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

அன்பும் அறமும் பிண்ணிப் பிணைந்த ஓர் உணர்வே மனித நேயம். அறம் என்றால் என்ன? மனத்துக்கண் மாசிலனாதல்-தூய மனம் உடையவராயிருத்தல்-இது அறத்துக்கு குறள் வகுத்த இலக்கணம். தூய மனதினின்று வெளிப்படும் உன்னத உணர்வே உண்மையானது. அதுவே மனித நேயம் என்பது. இராம கிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ற இவர்கள் எல்லாம் மனித நேயக் காவலர்களே. ஆம், "மனிதனை மனிதனாய் மதிப்பவன்தான் உண்மையான மனிதன்" என்னும் மாபெரும் சத்தியத்தினை மண்ணில் பரப்பிய இறைமகனின் முகம் இதோ இரத்தக் கறையில். இக்கோரக் காட்சியைக் கண்டும் காணாதவர்போல் இருந்தோர் பலர். அய்யோ, இவருக்கா இந்நிலை? என்று மனம் கலங்கியோர் சிலர். ஆனால் ஒரு பெண் மட்டுமே, சூழ்ந்திருந்த படைவீரரை விலக்கிக்கொண்டு வேதனையில் ஆறுதல் கூற முன் வந்தாள். இன்றைய சூழலில், மனித நேயத்திற்காக போராடுவோர் பலர் உருவிழந்து, உருகுலைந்து, பலரால் வதைக்கப்படுவதைக் கண்கூடாய் காண்கிறோம். போராடும் அவர்களுக்கு நாம் உதவியாய் இருக்கிறோமா? அல்லது வதைப்போரை வலுப்படுத்துகிறோமா?

**செபம்:** செந்நீர் சிந்திய இயேசுவே, எளியோரின் துன்பங்களைத் துடைப்பதிலும், நீதி, நேர்மை, மனிதநேயம் இவற்றிற்காய் உழைப்போரின் நிழலாய் நிற்பதிலும் வெரோணிக்காளைப்போல் துணிவுடன் நாங்கள் செயல்பட வரம்தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: நான் பாவி இயேசுவே என் வாழ்வை மாற்றுமே...**

**ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறை விழுகிறார்**

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

ஆம், நம்மிடம் இல்லையென்று இருப்போருக்கு நம்மிடம் உள்ளதைக் கொடுத்து புகழ்பெற வேண்டும். அதுவே மனிதராய் பிறந்தோருக்குக் கிடைக்கும் மாபெரும் செல்வம் என்று சொன்ன வள்ளுவரே, "தோன்றின் புகழோடு தோன்றுக" என்றார். ஏனெனில், இவ்வுலகில் நிலைத்து நிற்பது புகழ் ஒன்று மட்டுமே. இங்கு புகழெனப்படுவது, குறுக்கு வழியில் நாமாய் தேடிச்செல்லாமல், நேரிய வழியில் நம்மைத்தேடி வரும் புகழைத்தான் குறிக்கிறது. ஆனால், நடைமுறை

வாழ்க்கையில், படிப்பில், பட்டத்தில், செய்யும் தொழிலில், அணியும் ஆடையில், வீட்டுச் சூழலில் என எல்லாவற்றிலும் பிறரைவிட உயர்ந்த நிலையில் நான் இருக்க வேண்டும், பிறர் என்னைப் புகழவேண்டும் என புகழுக்காய் ஆசைப்பட்டு, குறுக்கு வழியில் சென்று அயலானை வஞ்சித்து நாம் உயர்வடையும்போது அவர்கள் விடுகின்ற கண்ணீர் இயேசுவை தரையில் வீழ்த்துகிறது. இதற்குக் காரணம் நாம் தானே. "உனக்கு புகழைத்தருகிறேன்" என அலகை கூறியபோது இயேசு மறுத்தார். ஆனால் இன்று புகழுக்காய் எதையும் செய்கின்ற நிலை உள்ளது. இது மாற வேண்டாமா?

**செபம்:** உலகை ஆளும் இறைவா, தற்புகழ்ச்சியை நாடாது, பிறரன்புச் செயல்களின் வழியாய்க் கிடைக்கும் புகழைப்பெற நாங்கள் தளராது செயல்பட துணைபுரியும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

பாடல் : **அஞ்சாதே அஞ்சாதே நான் என்றும் உன்னோடு...**

## எட்டாம் நிலை: இயேசு பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

"மயிலின் நடுக்கத்திற்காக போர்வைக் கொடுத்த பேகனே, எங்கே போய்த் தொலைந்தாய்? வா, லட்சம் லட்சமாய் பச்சை மயில்கள். வறுமை, அடிமை, வரதட்சணை இவற்றால் நடுங்குகின்றன-என்றேன். வேக வேகமாய் எதிரே வந்த பேகன், அவசர அவசரமாய் போர்வையை எடுத்துத் தன் முகத்தைப் போர்த்திக் கொண்டான்" என்று பாடுகிறார் கவிஞர் ஒருவர்.

பிறரின் துயரைத் தன் துயரமாய் ஏற்றுக்கொள்பவனே மனிதன் என்கிறார் வள்ளுவர். பாரமான சிலுவையைச் சுமந்து செல்லும் இயேசுவைக் கண்டு மக்கள் அழுகின்றனர். ஆனால், இயேசு தன் துன்பத்திலும் அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறார். நவநாகரீக உலகில், படிப்பில், பணியில், பெண்களுக்குச் சமஉரிமை வழங்கப்பட்டாலும், பெண்ணை ஒரு போகப் பொருளாகவே நினைக்கும் சமுதாயத்தில்தான் நாம் வாழுகிறோம். கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம், தற்கொலை, சிசுக்கொலை, பெண்ணடிமை, வரதட்சணைக்கொடுமை என பெண் சமுதாயம் இன்றும் கண்ணீர் விட்டுக்கொண்டுதான் இருக்கிறது. இக்கொடுமைகளைக் கண்டும் கண்மூடி, வாய்ப்பொத்தி, முகம் கவிழ்த்துக் கொண்டுச் செல்கிறோமா? அல்லது ஆறுதல், அன்பு, நீதி, உரிமை என்னும் போர்வையால் அவர்களை அரவணைக்கிறோமா?

**செபம்:** துயரிலும் ஆறுதல் அளிக்கும் இறைவா, நாங்கள் பெண்களின் துயரில் ஆறுதலாயும், அநீதியில் நீதியாயும், இன்னலில் அடைக்கலமாயும் வாழ்ந்து, உமது அன்பைப் பகிர்ந்திட வரம் தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

பாடல் : **கருணை இறைவா சரணம் கடைக்கண் பாராய் சரணம்...**

## ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை விழுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

மலருக்குத் தேவை வாசம்

மனிதனுக்குத் தேவை சுவாசம்-ஆனால்

ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவை விசுவாசம்.

"சோதனைமேல் சோதனை போதுமடா சாமி" என்கிறான் மனிதன். இச்சோதனைகளிலிருந்து விடுபட என்ன செய்வது? "சோதனை மற்றும் துன்பம் என்னைத் தொடராது காத்திடுவீர் என்று செபிக்கக் கற்பித்த இறைவனை நாட வேண்டியதுதான். ஆனால், அப்படி செபிக்க கற்பித்த இயேசுவுக்கு, தந்தை இறைவன்மேல் நம்பிக்கை உண்டா? என சோதித்தது பிசாசு. அவரோ ஆண்டவரை சோதியாதே என்கிறார். சோதனையைச் சாதனையாக்கினார். சாதனையைப் போதனையாக்கினார். போதனையைக் கேட்கும் நமக்கு ஆண்டவரின் திறமையைச் சோதிப்பதில் அலாதி பிரியம்.

இறைவா, எனக்கு வேலை கிடைத்தால், நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்தால், கடன்தொல்லை நீங்கினால், நோயினிலிருந்து குணமடைந்தால் என விண்ணப்பங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அவையனைத்தும் நாம் கேட்டவாறு நிறைவேறினால் கடவுள் இருக்கிறார் என்றும், இல்லையெனில் சடங்கு, ஜோசியம், ஜாதகம் என நம் விசுவாச வாழ்க்கையிலிருந்து விலகிவிடுகிறோம். அழிவிற்குச் செல்லும் வழியோ அகன்றது. ஆனால், இறையரசை அடைய நாம் பயணிக்க வேண்டிய பாதையோ குறுகலானது, கரடுமுரடானது. கரடு முரடான பாதையைக் கடந்து இறையரசு என்னும் நிலையான பரிசினைப் பெற விசுவாசம், நம்பிக்கை என்பனவற்றைத் துணையாகக் கொள்ள வேண்டும். அத்தகு வழியில் சென்று சோதனைகளில் வெற்றி கொள்ளத் தயாரா?

**செபம்:** அன்பு இயேசுவே, எங்களின் விசுவாசம் செத்த விசுவாசமாக அமையாது, உயிருள்ள முறையில் செயல்களில் வெளிப்படும் விசுவாசமாக அமைய வரம்தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல் : என்னை நேசிக்கின்றாயா...**

## பத்தாம் நிலை: இயேசுவின் ஆடையை உரிகிறார்கள்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

அன்று அடிமைப் புழுக்களாய் அலகையின் கைதிகளாய் விடியாத இருட்டுக்கு விருந்தினராய் எண்ணத்திலும் சிந்தனையிலும் ஏற்பட்ட நோய்களினால் கிறிஸ்துவத்தை அடகு வைத்தவர்களாய், தலையை நிமிர்த்தமாமல் தலைவிதியை நொந்தவர்களாய், நீண்ட அனுபவத்தை சுமந்தவராய் இருந்த கிறிஸ்தவர்கள், சுதந்திரமாய் மூச்சுவிட பாருலகைப் படைத்த பரமன் தன் ஒரே மகனையே மனிதனாக்கினார். பாவிகளுக்கு மன்னிப்பு, எளியோருக்கு இரக்கம், சிறைப்பட்டோருக்கு விடுதலை, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு, குருடருக்கு பார்வை என பல்வேறு வழிகளில் மனிதநேயம் என்னும் ஆடையை அணிவித்து மனிதத்தைக் காத்திட, வளர்த்திட முனைந்தவரின் ஆடைகள் பரிக்கப்படுகின்றன. என்னும் ஆடையை அணிவித்து மனிதத்தைக் காத்திட, வளர்த்திட முனைந்தவரின் ஆடைகள் பரிக்கப்படுகின்றன.அவரின் ஆடையைத் தொட்டாலே போதும் குணம் பெறுவேன் என்ற நம்பிக்கையோடு வந்தோருக்கு நலமளித்த நல்லவரின் அழகாடை அகற்றப்பட்டது. அவமானத்தால் கூனிக் குறுகி நிற்கிறார். மானத்தைக் காக்கும் ஆடை பரிக்கப்பட்ட நிலையில் நிற்கும் இயேசுவைக் கண்டு கதறுகின்றோம். ஓர் அரையாடை மனிதனால் பாரதத்திற்கு விடுதலை. ஆனால் இந்த அரையாடை மனிதனால் பாருக்கே விடுதலை. எனவே மனித மேன்மை என்பது அணியும் ஆடைகளில் அன்று. மாறாக, மனித நேயத்தை வளர்க்க நாம் மேற்கொள்ளும் தியாகங்களால் உயர்வடைகிறது. மனித நேயத்தை வளர்க்கும் செயல்களில் நமது பங்கு என்ன?

**செபம்:** அன்பின் இறைவா, ஆடை மோகம், ஆடைக்குறைப்பு, கவர்ச்சி இவைகள் அதிகரித்துவரும் இந்நாட்களில் ஆடைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தமால் மனித நேயத்தையும் வளர்த்திட வரமருளும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: கல்வாரி மலைமேலே கள்வர்களின் நடுவினிலே**

## பதினொன்றாம் நிலை: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**முதல்வர்** **: திவ்ய இயேசுவே...**

**எல்லோரும்** **: அதேனென்றால்...**

ஒரு ரசிகனைப்போல நான் நெருங்கி வருகின்றேன், நீயேன் ஒரு விமர்சகன்போல விலகி நிற்கிறாய்? ஆயிரமாயிரம் முகங்களின் நடுவிலும் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் உன்னையே. இன்றைய உலகில் குற்றவாளிகள், தீவிரவாதிகள், கலக்காரர்கள், கொள்ளையர்கள் இவர்களைக் கண்டுபிடிக்க தேடுதல் வேட்டை நடைபெறுகிறது. இது சுயவிளம்பரத்திற்காகவும், பதவி உயர்வுக்காகவும், பட்டம், பதக்கங்களுக்காகவுமே. ஆனால் பலன் ஏதும் எதிர்ப்பாராது தன் மக்களைத் தேடி மீட்டிட இறைவன் வகுத்த தேடுதல் வேட்டைக்கு நாம் அளித்த பரிசு அவரின் ஒரே மகனை சிலுவையில் அறைந்ததே. அன்னையாய், தந்தையாய், நண்பனாய், அன்பனாய் என நாம் விரும்பும் வழிகளில் நம்மைத் தேடிவரும் அவரை, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் மூன்று ஆணிகளின் மத்தியில் குடிவைத்தோம். பரம தந்தையின் தூதுவனாய், சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு தம்மைத் தாழ்த்திய இயேசுவை நாம் உற்று நோக்குவோம். மாசற்ற இரத்தம் மண்ணில் சிந்திட காரணமாய் அமைந்த நம் பாவங்களுக்காக மனம் வருந்துவோம். அவரின் வழியிலே இறைவனின் தூதுவர்களாய் விளங்கிட செபிப்போம்.

**செபம்:** சிலுவைச் சுமந்த தியாகச் செம்மலே, உம்மை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறையும் எம் பாவங்களுக்காக வருந்துகின்றோம். அவற்றிலிருந்து விடுபட வரமருளும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: இயேசு அழைக்கிறார் ஆவலாய் தன் கரத்தை...**

## பனிரெண்டாம் நிலை: இயேசு ஆவியைக் கையளிக்கிறார்

**முதல்வர்** **: திவ்ய இயேசுவே...**

**எல்லோரும்** **: அதேனென்றால்...**

ஒரு பூ உதிர்ந்து கிடக்கிறது, ஓரமாய் செல்லுங்கள் தோழர்களே, எந்தக் கொடுங்காற்றின் இடதுகால் இடரியதோ செடியின் சிரிப்பு இங்கே சிந்திக் கிடக்கிறது. கழுத்தைத் திருகிவிட்ட கையெதுவோ? தேவமொழி எழுத்து-தனித்திங்கே ஏங்கிக் கிடக்கிறது என்று. ஆண்டளவாய்ப் பழகிய தோழர்கள் எங்கே? குணம் பெற்று இறைவனைப் புகழ்ந்த மக்கள் எங்கே? ஓசான்னா பாடிய பெருந்திரள் எங்கே? யாருமே அருகில் இல்லையே? கள்வர்களின் நடுவில் தாயும் அன்புச்சீடரும் அருகில் இருக்க, பாதையில் செல்வோர் ஏளனப் பார்வையை வீசுகின்றனர். இவன் மடிந்தான் என மகிழ்ச்சிக் குரல் எழுப்பியது ஒரு கூட்டம். எல்லாம் நிறைவேறிற்று என்று தந்தையிடம் தன் ஆவியை ஒப்படைக்கிறார் இயேசு. இறந்துவிட்டார் எனில் கிறிஸ்தவம் வீழ்ச்சியுற்றதா? இல்லை. "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பயன் அளிக்கும்" என்னும் இறைவார்த்தை வாழ்வாகியது. இயேசு என்னும் கோதுமை மணி மண்ணில் மடிந்ததால் ஏராளமானோர் திருமறைக்காக தம் உயிரையும் அளித்தனர். அந்த வேதசாட்சிகளின் இரத்தமே

திருச்சபையின் வித்தாக அமைந்து இன்று ஆலமரமென தழைத்திருக்கிறது. கிறிஸ்துவத்தின் இத்தகு வளர்ச்சியை ஊக்குவிக்கும் வாழ்வாக நம் வாழ்க்கை அமைய வேண்டும். இல்லையேல் கிறிஸ்தவன் என்று பெயரளவில் வாழும் வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். இனியாவது திருமறையின் சாட்சியாக வாழ்ந்திட சம்மதமா?

**செபம்:** மீட்பளிக்கும் இறைவா, நாங்கள் உமக்கு சாட்சியாய் வாழ்வதையே சிந்தையில் நிறுத்தி, செயலில் காட்டிட வரம் தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்** **: வியாகுல மாமரியே தியாகத்தின் மாதாவே...**

## பதிமூன்றாம் நிலை: அன்னை மடியில் இயேசு

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

ஆகட்டும் என்றுரைத்து அமைதியில் ஆழ்ந்திட்ட அன்னையே, உம் மௌனங்களுக்குப் பொருள் கூற அகராதிகளே இல்லை. எங்களால் புரிந்து கொள்ளமுடிந்த ஒரே மௌனம், உம் இறுதி மௌனம் மட்டும்தான். உம் ஒவ்வொரு மௌனமும் எங்களால் பேசப்பட்டது ஆனால், உமது கடைசி மௌனம் தான் எங்களை ஊமைகளாக்கி விட்டது. உயிரற்ற தன் மகனின் உடலை மடியிலேந்தி கண்ணீர் சிந்தி, பேச்சற்ற சிலையாய் இருந்தாள் அன்னைமரி. ஏன் இந்த கண்ணீர்? தன் மகனின் தியாகப் பலியை நினைத்து, ஆனந்தக் கண்ணீர் விடுகிறாளா? இல்லை அனுதாபமற்று சிலுவைச்சாவை அளித்துவிட்டார்களே என துயரத்தால் நொந்து அழுகிறாளா? இறைமகன் உன் வயிற்றில் பிறப்பார் என்னும் செய்தியை ஆவலுடன் ஏற்ற அன்னை, உன் உள்ளத்தையும் ஓர் வாள் ஊடுருவும் என்னும் சிமியோனின் வாக்கை தியானித்த அன்னை, இன்று தன் அன்பு மகனை மடிமீது சாய்த்து "என் மகனுக்கு நீதி வழங்க யாருமே இல்லாத நிலையாகி விட்டதே" என மௌனப் போராட்டம் நடத்துகிறாரோ? இதற்கு நாம் என்ன பதில் அளிக்கப்போகிறோம். சிந்திப்போம்.

**செபம்:** அன்னையின் அன்பு மகனான இயேசுவே, எம் உண்மையான மனமாற்றம் உம் கல்வாரிப் பலிக்குப் பதிலாய் அமைய வரம்தாரும். ஆமென்.

**முதல்வர்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**எல்லோரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்...

**பாடல்:** **ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு...**

## பதிநான்காம் நிலை: இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்

**முதல்வர் : திவ்ய இயேசுவே...**

**எல்லோரும் : அதேனென்றால்...**

"இதோ இங்கு அமைதி ஓய்வெடுக்கிறது" என நேருவின் கல்லறைமீதும், "இவனை மட்டுந்தான் அடக்கம் செய்ய முடிந்தது இவனுடைய ஆசைகள் கடைவீதியில் அலைகின்றன" என ஒரு வியாபாரியின் கல்லறைமீதும், "உண்மையைச் சொல்லப்போனால் இவனது புகழ்பெற்ற உண்ணாவிரதப் போராட்டம் இங்குதான் ஒழுங்காக நடக்கிறது" ஒன ஒரு அரசியல்வாதியின் கல்லறைமீதும் எழுதியிருக்கிறார்கள். ஏன்? எழுதவும் செய்யலாம். ஆனால் இயேசு ஒரு நாட்டின் தலைவரோ, வியாபாரியோ, அரசியல்வாதியோ, அல்லர். அப்படியெனில் இயேசு யார்? அவரின் கல்லறையின்மேல் என்ன

எழுதுவது? மனிதரைப் புனிதராய் மாற்றிட, மனிதனாய் வாழ்ந்து, புனிதத்தையும், மனிதத்தையும் கற்பித்தவர். அவரின் கல்லறையின்மேல் "ஒரு நிமிடம் நில், உற்று நோக்கு உன்னுள் நீ மனிதனாகு அப்போது மனிதனில் புனிதனாவாய்" என்று எழுதலாம். கருவறைத் தொடங்கி கல்லறைவரை மனிதத்தையே கற்பித்த இயேசுவின் பாதையை உற்று நோக்கி, மனிதனாகிட மனிதரில் புனிதராகிட தயாரா?

**செபம்:** மனிதரைப் புனிதராய் மாற்றிட மனுவுருவெடுத்த இயேசுவே, நாங்கள் உம் வழிநடந்து மனிதநேயம் பரப்பி மனிதராய் மாறிட வரம்தாரும். ஆமென்.

**பாடல்: ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்...**

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

1. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், "கடவுளின் பெயர் இரக்கம்" என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டுப் பேசிய இத்தாலிய நடிகர் ரொபெர்த்தோ பெனினி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முழுவதும் இரக்கமுள்ளவராக இருக்கிறார் என்றும் இப்புத்தகம் புரட்சிகரமானது, வியப்புக்குரியது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணியின் முத்தாய்ப்பாய் இருப்பது இரக்கம் என்றும் கூறினார். மேலும் அவர் இரக்கம் ஒரு புண்ணியம் அல்ல, இது ஒரு நொடிகூட ஓய்வெடுக்காமல் பாவிகளையும் ஏழைகளையும் சென்றடைவது என்றும் தெரிவித்தார்.

2. ஒவ்வோர் உண்மையான மதமும், அமைதியை ஊக்குவிப்பதற்குத் தவறாது என்றும், உலகின் எல்லைவரை அமைதியின் செய்தியைக் கேட்கச் செய்வதற்கான தனது முயற்சிகளை திருப்பீடம் ஒருபோதும் நிறுத்திக் கொள்ளாது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

3. சீரோ-மலபார் வழிபாட்டு முறையின் காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் துணை ஆயராக அருள்பணி ஜோஸ் புளிக்கல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கேரளாவின் புனித தாமஸ் மவுண்டில் கூடிய சீரோ-மலபார் வழிபாட்டுமுறை திருஅவையின் ஆயர்கள் பேரவை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஒப்புதலின் பேரில், அருள்பணி ஜோஸ் புளிக்கல் அவர்களை காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமித்துள்ளது. 1964ம் ஆண்டு பிறந்த புதிய ஆயர் ஜோஸ் புளிக்கல் அவர்கள், 1991ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பெங்களூரு தர்மாரம் இறையியல் கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர், மறைக்கல்வி இயக்குனராகவும், 2014ம் ஆண்டிலிருந்து சீரோ-மலபார் வழிபாட்டுமுறை அருள்பணியாளர்களுக்குப் பொறுப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

4. ஆப்ரிக்கக் கண்டத்தில் இடம்பெறும் அனைத்துச் சண்டைகளையும் 2020ம் ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உறுதியளித்துள்ளது ஆப்ரிக்க ஒன்றியம். தென் சூடானிலுள்ள ஐ.நா. அமைதி காக்கும் அமைப்பில் சரணடைந்த அந்நாட்டு மக்கள் ஒப்படைத்த ஆயுதங்களை, அந்த அமைப்பும், ஐ.நா கண்ணிவெடிகள் தகர்ப்பு அமைப்பும் இணைந்து அழித்து வருகின்றன.

## தூய லூர்தன்னை திருத்தலம் - பெரம்பூர்
ஒரு வரலாற்றுப் பார்வை

திரு. லூயிஸ் சகாய ராஜ்

எளியோர் போற்றும் இறைவனின் தாயே
எங்கள் மாதாவே
லூர்து நகரின் நாயகியே
வாழ்க, வாழ்கவே
பெரம்பூர் நாடும் பிள்ளைகளை நீ
பேணிக் காப்பாயே
பேரன்பைப் பொழிந்து பரமனிடம்

பரிந்துரை செய்வாயே.

மரியன்னையின் அமல உற்பவ திருவிழா அறிவிப்பின் வெள்ளிவிழா நினைவாக, சூளை, புனித ஆன்ட்ரு பங்கின் ஒரு பகுதியாக இருந்த பெரம்பூரில் சிற்றாலயம் ஒன்று எழுப்பப்பட்டது. அருட்தந்தை H.Hennessey அவர்கள் இந்த சிற்றாலயத்தை பெரம்பூர் பகுதியில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கக் குடும்பத்தினருக்காக எழுப்பி, 1880ம் ஆண்டு தூய லூர்து அன்னைக்கு அர்ப்பணித்தார். 1903ம் ஆண்டு முதல் பெரம்பூர் தனிப்பங்காக செயலாற்றத் தொடங்கியது. அப்போதே சுமார் 5000 கத்தோலிக்க மக்களைக் கொண்டு செயல்படத் தொடங்கிய பங்கு இது. ஆனால், 500 பேர் மட்டுமே ஆலயத்திற்குள்ளிருந்து திருப்பலி காண முடியும் என்ற சூழ்நிலை. எனவே, மரியாயின் சேனையினரின் இடைவிடா முயற்சியாலும், மற்றும் கத்தோலிக்க விசுவாசிகளின் தொடர்ந்த செபத்தாலும் ஆலயம் விரிவாக்கம் செய்யப்படவும், அதற்கான இடம் கையகப்படுத்தவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மாபெரும் பணியை இறைவனின் திட்டத்தாலும் அன்னை மரியின் விருப்பத்தாலும் சலேசிய துறவிகள் செய்ய வேண்டியதாயிற்று. ஆம் 1928ம் ஆண்டு சென்னை உயர்மறைமாவட்டம் பெரம்பூர் பங்கினை சலேசிய அருட்பணியாளர்களிடம் ஒப்படைத்தது. ஞாயிறு திருப்பலிகளில் ஆலயத்திற்கு வெளியே பக்தியொழுகப் பங்கேற்ற கத்தோலிக்க விசுவாசிகளின் ஏக்கப் பெருமூச்சுகளுக்கு சலேசியர்கள் விடைத்தேடிக் கண்டடைந்தார்கள்.

அருட்தந்தை மைக்கேல் முர்ரே மற்றும் அருட்தந்தை ஆல்பிரட் மரியோட்டா அவர்களின் சீரிய முயற்சியாலும், பேராயர் லூயிஸ் மத்தியாஸ் அவர்களின் அங்கீகாரத்தாலும் புதிய ஆலயம் அமைக்க 1947ல் இடம் கையகப்படுத்தப்பட்டு ஆயலம் கட்டுமானப் பணிகள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1951 செப்டம்பர் 8ம் நாள் பேராயர் லூயிஸ் மத்தியாஸ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. முழுக்க முழுக்க அன்னையின் பக்தர்கள் தந்த நிதியால் ஆலயம் கட்டியெழுப்பப்பட்டு 1953 பிப்ரவரி, 22 அன்று அபிஷேகம் செய்யப்பட்டது. 1954 பிப்ரவரி 2 அன்று வெண்கலத்தால் செய்யப்பட்ட 3 ஆலய மணிகள் பிரான்ஸ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு பொருத்தப்பட்டன. அருட்தந்தை ஜோசப் சந்தனம் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் அவரது தலைமையில் இயங்கிய சலேசிய சமூகம் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடு வாழ் விசுவாசிகளின் நிதி உதவியைப்பெற்று மேற்கோவில் கட்டுமானத்தைத் தொடங்கினார். 1960ம் ஆண்டு பிப்ரவரி 11, தூய லூர்து அன்னை திருவிழாவன்று மேற்கோவில் அருட்பொழிவு செய்யப்பட்டது.

சென்னை மாநகரின் எழில்மிகு அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் இப்பேரலாயத்தை வடிவமைத்தவர் செவாலியே டேவிஸ் KSG அவர்கள். கீழ்க்கோவிலின் பீடம் தூய செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இது லூர்து நகரில் அமைக்கப்பட்டது போன்றே அமைந்தது. சிறப்பான ஸ்தூபிகளுடன் எழுப்பப்பட்ட மேல் ஆலயம் சென்னையில் ஏன் இந்தியாவில் அந்நாட்களில் மிகவும் அரிதான அமைப்பாக பேசப்பட்டது.

1961 பிப்ரவரி 14 அன்று 14வது தேசியத் திருப்பயணம் பேராயர் லூயிஸ் மத்தியாஸ் அவர்கள் தலைமையில் நடந்தது. தூய தொன் போஸ்கோவின் 150ம் ஆண்டு பிறப்பு விழாவின் சிறப்பு நிகழ்வாக பெரம்பூர் தொன் போஸ்கோ பள்ளிக்கு அடிக்கல் நாட்டி, பணிகள் தொடங்கப்பட்டன. சலேசியர்களின் அருட்பணியால் பராமரிக்கப்பட்டு வந்த பெரம்பூர் தூய லூர்து அன்னை திருத்தலத்தின் முதல் பங்குத் தந்தையாக அதிகாரப் பூர்வமாகப் பதிவியேற்றவர் அருட்திரு. ஜான் மெக்பரன் அடிகளார். 21.06.1967 முதல் சலேசியர்களின் முழுப்பொறுப்பில் இப்பங்கு செயல்படத் தொடங்கியது. அன்று தொடங்கி இன்று வரை பல இலட்சம் விசுவாசிகளின் ஆன்மீக வாழ்வுக்கு அடைக்கலமாக தூய லூர்து அன்னை திருத்தலம் விளங்கி வருகின்றது.

இத்திருத்தலப் பங்கிலிருந்து, பெரவளூர், செம்பியம் (மடுமாநகர், வியாசர்பாடி, சாஸ்திரி நகர், எருக்கஞ்சேரி, லட்சுமிபுரம், அயனாவரம், GKM காலனி சீனிவாசபுரம், என பல பங்குகள் தனித்தனியே செயல்படத் தொடங்கி அனைத்துப் பங்குகளுக்கும் தாய்வீடாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்தின் மூலம் நூற்றுக்கணக்கான குருக்கள், துறவிகள் அழைப்பு பெற்றுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். பணியாற்றிய இரு பங்குத் தந்தையர் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மாதமும் பிப்ரவரி 11ம் நாள் தூய லூர்து அன்னையின் நாளாக சிறப்பிக்கப்பட்டு, தெய்வீக சுகமளிக்கும் திருப்பலி-நற்கருணை பவனி-நோயாளிகள் ஆசீர்வாதம் என லூர்து நகரின் பாரம்பரிய வழிபாடுகள் பல அற்புதங்களையும்-புதுமைகளையும் மக்கள் காணச் செய்யும் வகையில் நடைப்பெற்று வருகின்றன.

137 ஆண்டுகளாக பெரம்பூரில் ஆலயம் கண்டு அருள்பாவித்துக் கொண்டிருக்கும் தூய லூர்து அன்னை திருத்தலம் நாடி வந்து, "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற செபத்தை உருகிப் பணிந்து மன்றாடும் எவருக்கும் கனிந்துருகி நலன்களைப் பொழிந்து வருகின்றார் என்பதற்கு திருத்தலத்திற்கு நாள்தோறும் வருகைதரும் மக்களும், ஒவ்வொரு

ஆண்டும் பிப்ரவரி மாதம் 11ம் தேதியை ஒட்டி நடக்கும் பெருவிழாவும் தேசியத் திருப்பயணத்திற்கு வருகைதரும் இலட்சக்கணக்கான மக்கள் கூட்டமும் சான்றாகும். இவ்வாண்டின் திருவிழாவிற்கு நாமும் செல்வோம். பிரமாண்ட ஆலயமும், பிரமிக்க வைக்கும் கூட்டத்தின் "மரியே வாழ்க" என்ற வாழ்த்தொலியும் நம்மிலும் ஓர் ஆன்மீக புத்தெழுச்சியை உண்டாக்கும். அன்னையின் வழியாக ஆண்டவரை நோக்கிப் பயணிப்போம். மரியே வாழ்க.

**சுடர் வாசகப் போட்டி 19 முடிவுகள்**

1. தூய ஆஞ்ஞேசம்மாள்
2. தூய தாமஸ் அக்குவினாஸ்
3. இரக்கத்தின் மறைப்பணியாளர்களுக்கு
4. தூய தாமஸ் அக்குவினாஸ்
5. தூய பிரான்ஸிஸ்கு சலேசியார்
6. தூய ஆஞ்ஞேசம்மாள்
7. தாழ்ச்சி
8. அனாதைகளின் தந்தை தூய தொன்போஸ்கோ
9. தூய தொன்போஸ்கோ
10. தூய பவுல்
11. ஒரு மரத்தோடு கட்டி அம்புகள் எய்து கொன்றான்
12. இயற்கை மன்னிக்காது
13. சீடர்களுக்கு, இயேசு கூறியது
14. 1. இல்லம் 2. பள்ளி 3. விளையாட்டுத்திடல் 4. ஆலயம்
15. 1கொரிந்தியர் 12:12

**சரியான விடை எழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்**

1. **Irudayaraj Perres, Chennai.**
2. **Sr. Lucy Peter, Ponneri.**
3. **P. Maria Gracy, Trichy.**

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)

## சுடர் வாசகப் போட்டி 20

1. காஞ்சிராப் பள்ளி மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டுள்ள ஆயரின் பெயர் என்ன?
2. "கடவுளின் பெயர் இரக்கம்" – என்பது திரைப்படமா?, புத்தகமா?, நாடகமா?
3. தூய கொன்சாலோ கார்சியாவின் பெற்றோர் எந்த இனத்தை சேர்ந்தவர்கள்?
4. அன்னை மரியாள் பெர்னதெத்துக்கு காட்சி கொடுத்த மலைக்குகையின் பெயர் என்ன?
5. ஜான் பிரிட்டோவின் தமிழ் பெயர் என்ன?

6. தூய பெர்னதெத்துக்கு அன்னை மரியாள் லூர்து நகரில் எத்தனை முறை காட்சியளித்தார் ?
7. தந்தை பியொ ஒரு நாளைக்கு எத்தனை செபமாலைகள் சொல்லுவார்?
8. அருளானந்தர் யாருடைய எளிய போதனா நெறியை பின்பற்றினார்?
9. தூய ஆகத்தம்மாளின் சிறிய செபத்தை எழுது ?
10. சீன மண்ணில் பூத்த தியாக மலர்கள் யார்? யார்?
11. பெரம்பூர் தூய லூர்து அன்னை ஆலயத்தை வடிவமைத்தவர் யார்?
12. இம்மாத இரக்கச் செயலாக சுடர் குறிப்பிடுவது யாது?
13. தவக்காலம் என்பது ---------ன் காலம் அல்ல. ---------ன் காலம்.
14. இயேசுவை கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கும் பொழுது அன்னை மரியாளும், தூய யோசேப்பும் என்ன கொண்டு சென்றார்கள்?
15. தான் ஒரு சிறுபிள்ளை என்று கூறி இறைவனின் அழைப்பிலிந்து தப்பிக்க முயன்ற இறைவாக்கினர் யார்?

## அடுத்த சுடரில்

**பகுதி - 1 : வழிபாட்டு வழிகாட்டி**

தவக்கால ஞாயிறுகள்

குருத்தோலை ஞாயிறு

பெரிய வியாழன்

பெரிய வெள்ளி

பெரிய சனி

பாஸ்கா இராவிழிப்பு

மார்ச் 4: இறையோடு 24 மணிநேரம்

**பகுதி - 2 : விசுவாசத்தில் வளர...**

சிலுவைப் பாதை - 2
ஒளியின் பாதை - 1


**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 50/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக்கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45. லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ..............................
முகவரி: ..............................
..........................................
..........................................
..........................................
தொலைப்பேசி: ...............